# தளிர்

சித்திரை - 1985
( மாத இதழ் )

விலை: 4 ரூபா.



கண்
விழித்திருப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிரின் வளர்ச்சிக்கு எமது வாழ்த்துக்கள்.

நண்பரின் அன்பளிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்

திரள்:- 3 இல: 1

சித்திரை:- 1985

விலை ரூபா:- 4

## உள்ளே


- கண்விழித்திருப்போம் !
- யூலை பேரழிவின் பின் மேதினம்
- தோட்டத் தொழிலாளரைப் பற்றிய- -பொய்மைகளும், உண்மைகளும்.
- தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும், சோஷலிஸத்திற்கான பாதையும்
- தலைமையின் வழிமுறை பற்றிய -சில பிரச்சனைகள்.
- மேற்கு சகாராவின் -விடுதலைப் போராட்டம்.
- தமிழீழப் பெண்களும் போராட்டமும்.
- விடுதலைப் போராட்டத்தில் -கலை, இலக்கியம்.
- ஒரு பாடல்


## தொடர்புகட்கு

"தளிர்"
ஆசிரியர் குழு
யாழ் - பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

## வாசகர்களுக்கு!

தளிர் பற்றியும், உள்நாட்டு - வெளிநாட்டு விடயங்கள் பற்றியும் உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுங்கள்.

## உறுதியான பாதையில்...!

தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னோர் இல்லாதவாறு இன்று மிகவும் நெருக்கடியான நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. அரச பயங்கரவாதம் உச்ச நிலையை அடைந்து-நாளுக்கு நாள் காணாமல் போவோர் தொகையில் அதிகரிப்பு - இராணுவத்தின் அராஜக நடவடிக்கைகட்கு பலியானவர்கள் தொகையில் உயர்வு - உயிர்களுக்கும், உயிர் வாழ்வதற்குமான உத்தரவாதமின்மை - இவைகளின் மத்தியில் அந்நிய கரங்களாலும் இரவல் யுத்திகளாலும் வலுப்பெற்று வரும் இலங்கை அரசு.

இவை ஒரு புறமிருக்க, விடுதலை இயக்கங்களுக்கிடையே சரியான புரிந்துகொள்ளலின்மை - புதைகுழிகளில் அடிக்கடி கிடக்கும் போராளிகளதும், மக்களதும் சடலங்கள் - சில தோழர்களது அராஜகப் போக்கும் எமக்கு வேதனையளிக்கிறது.

இவற்றுடன், நமது பொருளாதாரக் கட்டமைப்பில் புதிய மாற்றங்களின்மை – புதிய தொழில்நுட்பங்களையும், அறிவியல் அறிவையும் திறமையோடு ஆளுகின்ற வகையில் அறிவியல், கலாச்சார, பண்பாட்டுத் துறைகள் மேல்நிலைக்கு உயர்த்தப்படாமை. தொழில்துறைகளைத் தொழில்நுட்பம் மிகுந்த வகையில் மாற்றி, நம் பொருள் வளங்களைப் பெருக்கும் வகையில் மூலப் பொருட்களை கண்டுபிடித்தல் வேண்டும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் காண; கேட்கக் கூடியதாயிருக்கும் மனித அவலங்களையும், அதற்கெதிரான அவர்களது உறுதியான போராட்டங்களையும் அறிதலூடாக குறுகிய வட்டத்துக்குள் சிறைப்பட்டிருக்கும் எமது மனவோட்டத்தினை விரிவாக்கிக் கொள்ளக்கூடியதாய் இருக்கும்.

இவ் இதழுடன் "தளிர்" தனது மூன்றாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கிறது. காலத்தின் தேவையால் இவ் இதழிலிருந்து அது மாதமொருமுறை உங்கள் கரங்களை வந்தடையும். அரசினது அடக்குமுறையின் கூர்மையும், எமது மக்கள் தந்து வரும் ஆதரவும், புறப்பட்ட பாதையில் எமக்கிருக்கும் உறுதியும் "தளிர்" தொடர்ந்து வெளிவருவதை சாத்தியமாக்கிற்று

எதிர்காலம் நமக்குத்தான் என்றால் அதை வெல்வதற்கான முறையில் நமது இயக்கமும், நடைமுறைகளும் இருக்க வேண்டும். ஆம்! "வெல்வதற்கு ஒரு உலகமே இருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளிர் | தகவற் சேவை

### தென்னாபிரிக்காவில் இன்னொரு படுகொலை:-

பங்குனி 21-ம் திகதி தென்னாபிரிக்காவில் ஆளும் நிறவெறி வெள்ளையர் அரசிற்கெதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், நடத்தப் பட்டன. இவ் ஆர்ப்பாட்ட ஷார்ப்விலி எனும் இடத்தில் 25 வருடகளுக்கு முன்பு படுகொலை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களை நினைவு கூருவதற்காகவே நிகழ்ந்தன. வால் றீவ்ஸ் என்னும் இடத்தில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய தங்கச் சுரங்கத்தின் தொழிலாளர்கள் 40,000 பேர் அன்று வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள்

கறுப்பின மாணவர்கள் தெருக்களில் இறங்கி வீதித் தடைகளையும், தடுப்புக்களையும் ஏற்படுத்தி வெள்ளையர் இராணுவம் வரவிடாது தடுத்த பின்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 27 பேர் உயிரிழந்தனர் ஷார்ப்விலி படுகொலைகளின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை, இனவெறி தென்னாபிரிக்க அரசு இன்னொரு ''படுகொலைகள்'' மூலம் கொண்டாடியது.

இனவெறி பிடித்த தென்னாபிரிக்க அரசுடன் தான் அமெரிக்கா ஆக்க பூர்வமான உறவுகளை' வைத்திருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது தென்னாபிரிக்க - அமெரிக்கா - இஸ்ரேல் இராணுவக் கூட்டமைப்பு இரகசியமாக இயங்கி வருவது இன்று இரகசியமானதொரு விஷயமல்ல. சிறிலங்கா இனவெறி அரசிற்கு ஆயுதங்களை தென்னாபிரிக்க அரசிற் கூடாக இஸ்ரேல், அமெரிக்கா வழங்கி வருகிறது.

தென்னாபிரிக்காவிற்கெதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கோரும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அமெரிக்காவிலுள்ள பல பன்னாட்டு நிறுவனங்கள் கூட தென்னாபிரிக்காவில் தொழில் செய்வதை குறைக்க ஆரம்பித்துள்ளன.

### இங்கிலாந்தில் சிறைக் கைதிகள் சித்திரவதை - சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்:-

வட அயர்லாந்தில், சிறையிலுள்ள கைதிகளை சித்திரவதை செய்தமை தொடர்பாக, மார்கிரெட் தட்சரின் அரசிற்கு சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) கண்டனம் தெரிவித்துள்ளது.

சித்திரவதை குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் அறிக்கையும் உடனடியாக வெளிவிடுமாறு இங்கிலாந்து அரசை சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

வட அயர்லாந்திலுள்ள கத்தோலிக்கச் சிறுபான்மையினரிடமிருந்து வெளிப்படும் இங்கிலாந்து அரசிற் கெதிரான உணர்வை தட்சரின் கொடுங்கோல் அரசு இராணுவ பலத்தால் ஒடுக்க முடியும் என்று கருதுகிறது. ஐரிஷ் குடியரசு இராணுவத் (IRA) தினால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்ப்புற கெரில்லாப் பாணியிலான தாக்குதல்கள் இங்கிலாந்து அரசிற்கு மேலும் மேலும் தலையிடிகளைக் கொடுத்து வருகின்றன. முப்பது வருடங்களுக்கு மேலாக வெறுமனே நகர்ப்புற கெரில்லாத் தாக்குதல்களில் மட்டுமே கவனம் செலுத்தி வருவதால் ஐரிஷ் குடியரசு இராணுவமும் வட அயர்லாந்தில் ஒரு மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை என்பதும் அவதானிக்கத் தக்கது.

### லெபனானை விட்டு இஸ்ரேலிய துருப்புக்கள் வெளியேறும் நிலை:-

கடந்த வாரம் இஸ்ரேலியத் துருப்புக்கள், லெபனானில் மேலும் பல இடங்களிலிருந்து பின் வாங்கின. இது திட்டமிட்ட படி இறுதியான பின் வாங்குதலில் பெருமளவை நடைமுறைப் படுத்தும் ஒரு அம்சமாகும். எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்பாக இஸ்ரேல் முற்று முழுதாக லெபனானை விட்டு வெளியேறி விடும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

இது வரை காலமும் இஸ்ரேலியர்கள் அறிந்திருந்த ஒரேயொரு பயங்கரமான எதிரி பாலஸ்தீன தேசிய விடுதலை இயக்கங்களாகும். இன்று ஷியைற் முஸ்லீம்களினதும் பயங்கரமான எதிர்ப்பை அவர்கள் லெபனானில் எதிர் கொள்ள வேண்டி இருக்கிறது.

இஸ்ரேலுக்கு எதிராகப் போராடும் குழுக்களை ஒன்றிற்கொன்று எதிராகப் போரிடுமாறு தூண்டும் பிரித்தாளும் தந்திரத்தையே இஸ்ரேல் பிரயோகிக்க முற்படுகிறது. எனினும் ஷியைற் முஸ்லிம் தீவிரவாதிகள், இஸ்ரேலின் சேத்திர நிலையங்களை மிகவும் மோசமாகத் தாக்குவதால் இஸ்ரேல் லெபனானை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டுள்ளது.

தனது 'எல்லைப் புறங்களை' (இவை பெருமளவிற்கு பாலஸ்தீனியரின் நிலங்களாகும்) பாதுகாப்பதற்கு இப்போது இஸ்ரேலிற்கு வேறு வகையான உபாயங்கள் தேவைப்படுகின்றன. அவர்களுக்கு அமெரிக்காவும் சீ ஐ ஏ.யுமே துணையாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்விழித்திருப்போம்!

"அருச்சுனு"

நமது போராட்டம் இப்போது மிகவும் சிக்கலான சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. சில ஒழுங்கு படுத்தப்படாத நடவடிக்கைகளும் அரசின் தீவிர ஒடுக்குமுறைகளும், அமைப்புக்களுக்கிடையே சரியான புரிந்து கொள்ளல் இன்மையும், இவற்றின் பின்னணியில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பூகோள அரசியலும் (Geopolih'es) தீவிரமாக ஒன்று கலந்து கிட்டத்தட்ட ஒரு 'குழப்பமான' நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு பின்னடைவு என்பதில் சந்தேகமில்லை, ஆனால் தோல்வி அல்ல; நிச்சயமாகத் தோல்வி அல்ல;

சூழவர, மக்கள் எழுப்பும் அதிருப்திக் குரல்களைக் கேட்கின்றோம். அமைப்புகளுக்கெதிராக மக்கள் எழுவதையும் ஆங்காங்கு காண்கிறோம். இத்தகைய பின்னடைவிற்குப் பிரதானமான காரணம் எமது போராட்டம் மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். மக்கள் திரளில் மிகப் பெரும்பாலானோர் மனப்பூர்வமாக போராட்டத்தை ஏற்றுக்கொள்வதும், ஆதரவு தருவதும் மட்டும் போதும் என்பதும், இவற்றை அடிப்படையாக வைத்து இளைஞர்கள் போராடி வெல்வதும் எனபதே பல இயக்கங்களின் அடிப்படைச் சித்தாந்தம் என்று தோன்றுகிறது. 'நீண்டகால மக்கள் யுத்தம்' என்று சொல்லிக் கொண்டே குறுகிய கால உடனடித் தீர்வுக்காக வேலை செய்வது என்பது பல இயக்கங்களின் நடைமுறையாகி விட்டது. இத்தகைய பிழையான அணுகுமுறையே, வரன்முறையற்று 'அளுகொள்ளை' யாக இயக்கங்களுக்கு ஆள் பிடிக்கும் போக்கைத் தோற்றுவித்தது. குறிப்பாக யூலைக் கலவரத்தின் போது பின்னுன ஆயுதப் பயிற்சி மோகத்திற்குப் பலியாகியமையே நமது இன்றைய சிக்கலான சூழலின் காரணம் எனலாம். இந்த சிக்கலுக்குக் கணிசமான அளவிற்கு நாம் இந்திய அரசிற்கும், அதனது அனுபவம் வாய்ந்த சர்வதேச இராஜதந்திரத்துக்கும் 'நன்றிக் கடன்' பட்டவர்கள்.

இன்று தமிழீழம் என்பது ஒரு மனோநிலை மட்டுமேயாகும். அனைத்துத் தமிழ் மக்களும் இந்த மானசீகத் தமிழீழத்தில் வாழ்கிறார்கள் என்றால் அது கூட மிகையாகவில்லை. ஆனால் இந்த மானசீகத் தமிழீழத்தை, ஒரு ஸ்தூலமான தமிழ் ஈழமாக அமைப்பதில் (கவனிக்கவும்: பெறுவதில் அல்ல) நமது நடைமுறைகள் என்ன?

தேசிய இனத்தைப் பற்றியும், ஸ்டாலினின் பிரசித்தி பெற்ற வரையறைகளையும் பற்றி (பொது மொழி, பொதுப் பொருளாதாரம்,.... ...... இன்ன பிற) எல்லோரும் தான் எழுதியாயிற்று, ஆனால் நடப்பது என்னவெனில், இதற்கு மாறாகத்தான் இருக்கிறது நமது உணவு வளங்களையும், வழங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் சுயசார்புப் பொருளாதாரத்தை கட்டியமைப்பதற்கும் பதிலாக இருக்கும் குறைந்த பட்ச பொருளாதார வலைப்பின்னலையும் நிர்மூலமாக்குகிறோம். ஒரு சின்ன உதாரணம்: வடபிரதேசத்திற்கு நன்னீர் வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதனது வேலைகளும் 75% அளவு முடிவடைந்த நிலையில் அங்கு கடமையாற்றிய இரு அமெரிக்கர்கள் கடத்தப்பட்டதும், பிறகு அடுத்தடுத்து அத்திட்டத்திற்குப் பணியாற்றி வந்த வாகனங்கள் 'காணுமல்' போனதும், கடத்தப்பட்டதும் அத்திட்டத்தை ஒரேயடியாக மூடப்பண்ணிற்று. விளைவாக குடாநாட்டின் தண்ணீர்ப் பிரச்சனையைப் பெருமளவு தீர்த்து வைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை இழந்தோம். அமெரிக்க உதவி, சீ. ஐ. ஏ என்ற பெயர்களை மட்டும் குற்றம் சாட்டி தீர விசாரிக்காமல், நீண்ட காலக் கண்ணோட்டம் அற்ற ஒரு மடச் செயலைப் புரிந்தோம். விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்குப் பயன்பட்டு வந்த நெல்லைக் கொள்ளை அடித்தோம். இப்படி எழுதிக் கொண்டு போகலாம்...

இத்தகைய செயல்கள் மூலம் நாம் எதிரியின் திட்டங்களுக்கு இரையாகி விடும் ஆபத்து எழுந்துள்ளது வெற்றிகரமான எதிர்ப் புரட்சி நடவடிக்கைக்கு அடிப்படையாக இருக்கும் தத்துவம், போராளிகளையும் மக்களையும் பிரித்து தனிப்படுத்தி பின்னர் போராளிகளை அழித்தொழிப்பதாகும். இஸ்ரேலிய ஷின் - பெத்தும், மொசாட்டும் இந்த வழிமுறைகளைத்தான் சிறி லங்கா கூலிப்படையினருக்கு பயிற்றுவித்துள்ளன. ஆரம்பத்தில், ஒவ்வொரு தாக்குதலுக்குப் பிறகும் நிலைகெட்டு தெரிவுகள் இல்லாமல் தீயிட்டு அழிக்கும் வேலைகளைச் செய்து வந்த ராணுவம், இன்று குறிப்பாக' தேர்வு செய்த வீடுகளை குண்டு வைத்துத் தகர்ப்பதும், 'உண்மை நிலை விளங்கிய ராணுவ வீரர்கள்' என்று துண்டுப் பிரசுரம் வெளியிடுவது இத்தகைய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளின் முன்னேறிய ஒரு வடிவமாகும். இத்தகைய சூழலில் போராளிகளுக்கும் இடையே பிணக்குகளும், குறைந்த பட்ச உடன்பாடும இல்லாமலிருப்பதும், போராளிகள் பல சந்தர்ப்பங்களில் மக்கள் நலன்களைப் பகைத்துக் கொள்வதும் அரசுக்கு துணை போகும் காரியமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வியட்நாம் மக்கள் யுத்தத்தையும் சீனப் புட்சி அநுபவத்தையும் நினைத்துப் பார்ப்பது பயன் தருவதாகும். சிறிய தற்பாதுகாப்புக் குழுக்களிலிருந்து மெல்ல மெல்ல கெரிலா அணிகளாக வந்து, ஒரு மக்கள் விடுதலை ராணுவமாக மலர்ந்த வியட்நாமிய மக்கள் இராணுவம், எப்பொழுதும் தன்னுடைய உறுப்பினர்களுக்கு முக்கியமான ஒரு விதியை கட்டாயமாக அமுல்படுத்தியது. ஜெனரல் ஜியாப்பின் 'மக்கள் யுத்தமும் மக்கள் ராணுவமும்' என்னும் நூலில் பின்வருமாறு அந்த விதி இடம் பெற்றது

"மக்களுடனான உறவுகளைப் பொறுத்த வரையில், மக்களுடைய நம்பிக்கையையும், அபிமானத்தையும் பெறும் வகையில் மக்களை மதிக்க வேண்டும். மக்களுக்கு உதவ வேண்டும். மக்களைப் பாதுகாக்க வேண்டும்."

மக்களுடனான உறவுகளில் மேற்கூறியவாறு நடந்து கொள்ளாத எந்த விடுதலை அமைப்பும் மக்களை அணிதிரட்டுவதில் வெற்றியடைய முடியாது. வெற்றிகரமான ஒரு கெரில்லாத் தாக்குதலிற்கும் பிறகு, தாக்குதலைச் செய்த அமைப்பு மக்கள் மத்தியில் பெறும் பிரபலமும் பெயரும் மட்டும் மக்களை அணிதிரட்டப் போதுமானதல்ல. மக்களை அமைப்பாக வென்றெடுத்தால் மட்டுமே மக்கள் யுத்தப் பாதை சாத்தியமாகும். மக்கள் அமைப்பாக வென்றெடுக்கப்படாதவரை போராளிகளுக்கும், மக்களுக்கும் இடைவெளி இருக்கும் வரை இந்த இடைவெளிகளுள் அமெரிக்க சி. ஐ. ஏ, லலித் அத்துலத்முதலி போன்ற சகலரும புகுந்துகொள்ளக் கூடிய அபாயம் இருக்கிறது. இந்த உண்மையை அனைத்துப போராளிகளும் புரிந்து கொள்வது மிக அவசியமானதாகும். ஏற்கெனவே இந்த இடைவெளிகளில் யார் யார் புகுந்திருப்பார்கள் என்றும் சந்தேகம் எழுகிறது.

நமது இன்றைய சூழல் நம்மை ஒரு பின்னடைவுக்குத் தள்ளியிருக்கிறது என்று ஏலவே கூறினோம். இந்தப் பின்னடைவின் மிக மோசமான அம்சம் என்னவென்றால் விடுதலை அமைப்புக்களும், கூட்டணியும் அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்று வளர்ந்து வரும் ஒரு போக்காகும். இடைக்கால 'யுத்த நிறுத்தம்' என்று பேசப்படும் இம் முயற்சி சாத்தியமாகும் பட்சத்தில் சிறி லங்கா அரசுக்கும், போராளிகளுக்கும் தம்மை வளர்த்துக் கொள்ள அவகாசம் அளிக்கும் என்பது உண்மையே. எனினும் இத்தகைய பேச்சு வார்த்தைகள் சமரசத்தை நாடும் போக்குடையன, போராட்டத்தை விற்று விடுகிற அபாயமும் இந்து சமுத்திரப் பிராந்திய பூகோள அரசியலுக்கு நமது போராட்டமும், நமது மக்களும் பலியாகி விடுகிற அபாயமும் உள்ளது. அந்த வகையில் நம்முடைய விடுதலைப் போராட்டம் மிகவும் இக்கட்டான ஒரு கட்டத்திற்குள் அடி எடுத்து வைக்கிறது.

இப்போது நமக்குத் தேவையானது மிகவும் முக்கியமாக அறிவு பூர்வமான அரசியல்; இலட்சியத்தை விட்டுக் கொடுக்காத மனோபாவம்; இறுதி வரை போராடும் மனோதிடம்; எல்லாவற்றிற்கும் மேலாக நமது பலத்திலும், நமது கால்களிலும் தங்கியிருத்தல் என்ற மேலான ஞானம் ✲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூலை பேரழிவின் பின் மேதினம்

- நியூட்டன் குணசிங்க -

சரியாக ஒரு ஆண்டிற்கு முன்னர் சென்ற மேதினத்தின் போது வெளியிடப்பட்ட இக் கட்டுரையின் மொழிபெயர்ப்பை இங்கு தருகிறோம். நியூட்டனின் கருத்துக்கள் சிலவற்றில் எமக்கு அபிப்பிராய பேதமுண்டு. எனினும் அவரின் நியாய உணர்வு, அரசியல் நேர்மை, கருத்தாழம் ஆகியவற்றை மதிக்கிறோம். இன்றைய அரசியல் நிலையை மதிப்பீடு செய்வதற்கு இவரின் சிந்தனைகள் பயன்படும்.

கலாநிதி நியூட்டன் குணசிங்க கொழும்பு பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். பொருளியல், சமூகவியல், அரசியல் துறைகளில் சிறந்த மார்க்சீய ஆய்வுகள் சிலவற்றை எழுதியுள்ளார். இனப்பிரச்சனைகள் தொடர்பாக அவர் எழுதிய 'Open Economy and Racial Strife' என்னும் ஆய்வுக்கட்டுரை வாசகர்கள் கட்டாயம் படிக்க வேண்டியதொன்று.

1983 யூலையில் நடைபெற்ற தமிழருக்கு எதிரான கலவரம் இலங்கையின் வரலாற்றின் முக்கியமான திருப்புமுனைகளில் ஒன்று என்பது வெளிப்படையான உண்மை. இலங்கைமீது சமூகக்கட்டமைப்பில் முன்னர் நிலவிய ஒரு வகைப்பட்ட சமநிலை சிதைக்கப்பட்டுவிட்டது. இச்சிதைவு மீளமைக்க முடியாது. புதியதொரு சமநிலை இன்னும் உருவாக்கம் பெறவில்லை. இனமொழி உணர்வுகள் மிக உச்சம்பெற்றுள்ள சூழ்நிலை இன்று நிலவுகிறது. இச்சூழலில் இடதுசாரி ஜனநாயக சக்திகள் மிக மோசமான குழப்பத்தில் சிக்கியுள்ளன. இந்தக் குழப்பத்தின் தெளிவான அறிகுறி ஒன்றை பாரம்பரிய இடதுசாரிகளிடம் (Old Left) காணலாம். அது யாதெனில் இனப்பிரச்சனையை கண்டும் காணாமல்விடும் பான்மையினதான சோற்றுக்குள் முழுப்பூசணிக்காயை மறைக்கும் முயற்சியும் 'நோவில்லாத முறையில்' பொருளியல் வர்க்க வகைப்பட்ட சுலோகங்களைக் கூச்சலிடுவதுமாகும்.

இன்றைய காலகட்டத்தில் சூழமைவின் அடிப்படையான அம்சங்கள் எவை என்று பார்ப்போம். இலங்கையின் மிகப் பெரும்பான்மையை உள்ளடக்கும் இரு இனங்களும் கடந்த சில ஆண்டுகளாக இருவேறு திசையில் பிரிந்து போய்க்கொண்டிருக்கின்றன. இன்று இவ்விரு சமூகங்களிடையேயான தொடர்பில் பெரிய முறிவும் இடைவெளியும் உண்டாக்கிவிட்டது. இவ்வினங்கள் ஒவ்வொன்றின் உள்ளேயும் உள்ள உள்ளார்ந்த சமூக முரண்பாடுகளும், வர்க்க சமூகப்படித்தர முரண்பாடுகளும் ஒன்றுக்கொன்று சமச்சீரற்ற முறையில் வளர்ச்சி பெற்றுள்ளன. தமிழ்ச் சமூகம் தனது இருப்புப்பற்றியும், நிலைபேறு பற்றியுமே அச்ச உணர்வு கொண்டுள்ள காரணத்தினால் அதன் மத்தியில் உள்ள வர்க்க முரண்பாடுகள் தணிந்து உள்ளன. இன்னும் கூறப்போனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை மறைந்து பின்னடங்கி நிற்கின்றன. சிங்களச் சமூகத்தின் மத்தியிலோ நிலைமை முற்றிலும் மாறானது. கூர்மையான சமூக முரண்பாடுகள் வெளிக்கிளம்பியுள்ளன. இவை யதார்த்தமானவை மட்டுமல்ல தெளிவாக உணர்வு நிலையில் வெளிக்காட்டுவனவும் ஆகும். பரந்த வெகுஜனங்களுக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் இடையிலான இம்முரண்பாடுகள் தொடர்ந்து நிலைபெற்றுள்ளன. ஆனால் வெகுஜனமட்டத்தில் இம்முரண்பாடுகள் பொய்மையான புறநிலை வெளிப்பாட்டைக் கொண்டுள்ளன. ஏற்கனவே சலுகைபெற்றுள்ள தமிழர்களின் நியாயமற்ற கோரிக்கைகள் என்ற பொய்யுணர்வு இப்புறநிலை வெளிப்பாட்டின் பின்னணியாகும். அல்தூசரின் வார்த்தைகளில் கூறுவதாயின் இரு சமூகங்களின் மத்தியிலும் இனமுரண்பாடுகள் வர்க்கமுரண்பாடுகளைவிட மேலாதிக்கம் (Overdetermination) பெற்றுள்ளன. மேலாதிக்கம் என்றால் ஒருகுறித்த சமூக அமைப்பின் குறிப்பிட்ட காலகட்டத்தின் முரண்பாடுகள் மீதான மேலாதிக்க அமைப்பு (a Structure of Dominance) எனப் பொருள் படும்.

ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பானது ஒரு குறித்த வகைப்பட்டதான மேலாதிக்கத்திற்கு உட்படும் பொழுது அச்சமூக அமைப்பின் உள்ளார்ந்த முரண்பாடுகளின் தீவிரமும் அவற்றின் தீர்வுக்கான முறைகளும் எவ்விதம் தீர்மானிக்கப்படுகின்றன? அவற்றின் முதன்மையான தீர்மானசக்தி மேலாதிக்க அமைப்புத்தான் (Structure in Dominance) முரண்பாடுகள் இரண்டாம் பட்சமான தீர்மான சக்திகளாகும். இன்றைய கட்டத்தில் இலங்கையின் சமூக அமைப்பில் வர்க்க முரண்பாடுகளை விட இனமுரண்பாடுகள் மேலாதிக்கம் பெறுகின்றன என்றால் இதன் தர்க்கரீதியான முடிவு யாதெனில் வர்க்கப் போராட்டம் தூய வெற்றிடத்தில் நிகழவில்லை. இன முரண்பாடுகள் என்ற ஊடகத்தில் தான் நிகழ்கின்றன என்பது தெளிவு. இவ்வின முரண்பாடுகளே வர்க்க முரண்பாடுகளின் தீவிரம், முனைப்பு, தன்மை ஆகியவற்றை நிர்ணயம் செய்கின்றன. மேலும், வர்க்க உறவுகள், வர்க்கங்களுக்கிடையேயான கூட்டு ஆகியவற்றின் மீது தனது மேலான ஆதிக்கத்தை இனமுரண்பாடுகள் செலுத்துகின்றன. ஆகவே இனப்பிரச்சனை தொடர்பாக சோற்றுக்குள் முழுப்பூசணிக்காயை மறைக்கும் கொள்கை முட்டாள்த்தனமானது. சில இடது சாரிக்குழுக்கள் இனப்பிரச்சனையை மறந்துவிட உறுதிகூறுவதால் இனப்பிரச்சனை மறைந்து மாயமாகிப் போகப் போவதில்லை.

இனப்பிரச்சனையை வெளிப்படையாக எதிர் கொள்வதால் மட்டுமே இந்த மேலாதிக்கத்தின் விளைவுகளைச் சற்றேனும் குறைக்கலாம். மக்கள் மத்தியில் இருந்து அதிகாரப்பரவலுக்கு வழிவகுக்கும் நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை வகுப்பதும், தொழிலாள வர்க்கத்தின் மத்தியிலும் இத்தீர்வு பற்றிப் பிரச்சாரம் செய்வதும் இனமுரண்பாட்டு மேலாதிக்க விளைவுகளைத் தணிக்கும். மக்கள் எவ்வழி நாமும் அவ்வழி என்னும் Tailsm த்திற்கு இடதுசாரி ஜனநாயக சக்திகள் ஆளாகக்கூடாது. இது மக்களின் பின் ஓடுவதாகும். அரசியல் தலைமை என்பது அன்ரனியோ கிராம்சி கூறியது போல் 'வழிநடத்துகை' ஆகும். இதன் அர்த்தம் இடதுசாரிகள் இன்றைய கட்டத்தில் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த கருத்தைப் பிரதிபலிப்பதல்ல. மாறாக தீர்க்கதரிசனத்துடன் கூடிய திட்டம் ஒன்றையும் அதை அடைவதற்கான உபாயங்களையும் தொழிலாள வர்க்கத்தையும் ஏனைய உழைக்கும் வர்க்கங்களையும் அவ்வழியின் பக்கம் வென்றெடுக்கும் முறைகளையும் முன்வைப்பதாகும்.

இனமுரண்பாட்டின் மேலாதிக்கம் இலங்கையின் சமூக அமைப்பைப் புதுமையான முறையில் பாதித்துள்ளது. வழமையான அரசியல் கூட்டுக்களையும், பிரிவினைகளையும் இது கண்டபடி குழப்பியடித்து புதிய கூட்டுக்களையும், பிரிவினைகளையும் உருவாக்கியுள்ளது. முன்னர் கண்டிராத புதிய அரசியல் கூட்டாளிகள் அரங்கிற்கு வந்துள்ளனர். நமக்குத் தெரிந்த வழமையான கூட்டிணைவுகள் பல தசாப்தங்களின் அரசியல் இக் ட்டுக்களையும் சமாளித்து உயிர் பிழைத்த கூட்டிணைவுகள் முறிந்துபோய் விட்டன. 'முற்போக்காளர்' 'பிற்போக்காளர்' என்ற முகாம்களின் உள்ளேயே இனப்பிரச்சினைக்கான சாத்தியமான தீர்வுகள் எவை என்னும் சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலால் பிளவுகள் தோன்றியுள்ளன. இதே வேளை அரசியலின் எதிர்முனைகளில் நின்ற சக்திகள் தம்மிடையே இப்பிரச்சினையில் ஒற்றுமைகளையும், உடன்பாடுகளையும் கண்டுபிடித்துள்ளன. அரசியல் பங்காளியான தொண்டமானின் இ. தொ. கா. வழமையாக பிற்போக்கு முகாமைச் சார்ந்தது எனக் கணிக்கப்படுவது. அது பிராந்திய சபைகளை அமைப்பதான அதிகாரப் பரவாக்கலை ஆதரிக்கிறது. தினேஷ் குணவர்த்தனாவின் ம. ஐ. மு. (M. E. P.) பல இடதுசாரிக் கூட்டுக்களின் பங்காளி. வழமையான கணிப்பின்படி இது முற்போக்கு. ஆனால் எவ்விதமான நியாயமான அதிகாரப் பரவலாக்கலையும் இது எதிர்ப்பதோடு, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கூட்டப்பட்ட அரசியல் மகாநாட்டிலும் பங்குபற்ற மறுத்தது. கம்யூனிஸ்ட் (C. P. S. L.), சமசமாஜ (L. S. S. P.) கட்சிகள் அதிகாரப் பரவலாக்கலை ஆதரித்தன. விஜயவீராவோ எனில் எத்தகைய அதிகாரப் பரவலாக்கலையும் எதிர்க்கும் முறையிலான இனவாதக் கனல் தெறிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இத்தகைய புதுமையான பிளவுகளும் கூட்டுக்களும் தூய்மையான வர்க்க முரண்பாடுகளின் உந்துதலால் எழும் வெளிப்பாடுகள் அல்ல; இவை மேலாதிக்கத்தின் வெளிப்பாடுகள்.

சிங்கள சமூகத்தின் மத்தியில் உள்ள அரசியல் இயக்கங்களிடையே 'முற்போக்காளர்' எனக் கருதப்படுவோரிடையே இரு வேறான ஒன்றிற்கொன்று முரண்பட்ட கருத்துப் போக்குகள் தோன்றியுள்ளன. முதலாவது வகை கருத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்; இன்றைய ஆட்சி நவகாலனித்துவத்தின் கைக்கருவி, சர்வதேச நாணய நிதி - உலகவங்கி ஆகியவற்றின் கைப் பாவை, எங்கள் மக்களை இது அரசியல் ரீதியில் ஒடுக்குகின்றது. தேர்தலை நடத்தாமல் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. சுற்றுலா போன்ற துறைகளை வளர்ப்பதன் மூலம் எமது கலாச்சாரத்தைச் சீரழிக்கிறது. ஆகவே இந்த ஆட்சியை எதிர்ப்பதற்கு எல்லா முற்போக்கு தேசபக்தச் சக்திகளும் ஒன்றுபடுதல் வேண்டும். இரண்டாவது வகைக்கருத்து பின்வருமாறு: மேலே கூறிய அம்சங்களை இன்றைய ஆட்சி வெளிப்படுத்துவது உண்மைதான். இதில் சந்தேகத்திற்கு இடமில்லை; ஆனால் எல்லா முற்போக்காளர்களையும், தேசபக்தச் சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு ஐக்கிய முன்னணி இன்றைய கட்டத்தில் தவிர்க்க இயலாதபடி பெரும்பான்மையினரான சிங்கள இனவாதிகளை உள்ளடக்கும். இதனால் இந்த தேசபக்த ஐக்கிய முன்னணியின் ஆதிக்கம் பெற்ற கருத்து நிலையாக இனவாதமே மேலோங்கி நிற்கும். இது இனப் பிரச்சனையின் தீவிரத்தை உச்ச சக்தியில், பதட்ட நிலையில் வைத்திருக்கக் காரணமாவதால் ஐக்கிய முன்னணி இனப் பிரச்சனையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கான எவ்வித முயற்சிக்கும் மிகப் பலம் வாய்ந்த தடையாக அமையும்: இன உணர்வுகளின் தீவிரகதி வர்க்க, பொருளியல் பிரச்சனைகளை மையமாக வைத்து மக்களைத் திரட்டுவதற்கு இடதுசாரிகளுக்கு இடம் கொடுக்க மாட்டாது. இறுதி ஆய்வில் இச் சூழ்நிலை இன்று ஆட்சியிலுள்ள அடிவருடி முதலாளித்துவத்திற்கு பக்க பலமாக அமையும். தொழிலாள வர்க்கத்தின் நோக்கில் இன்றைய பிரதான தேவை இன்று ஏற்பட்டுள்ள இனப் பிரச்சனையால் எழும் பதட்ட நிலையைத் தணிப்பதாகும். இதன் மூலம் வர்க்கப் பிரச்சனைகளை முன்வைப்பதற்குச் சாத்தியமான சூழ்நிலை உருவாகும். இதை மனதில் கொண்டு இனப் பிரச்சனையால் எழும் பதட்ட நிலையைத் தணிப்பதாகும். இதன் மூலம் வர்க்கப் பிரச்சனைகளை முன் வைப்பதற்குச் சாத்தியமான சூழ்நிலை உருவாகும் இதை மனதில் கொண்டு இனப்பிரச்சனையின் தீர்வுக்கான ஆகக் கூடிய உச்ச அரசியல் தீர்வு ஒன்றை தயாரித்தல் வேண்டும். இத்தீர்வு ஐக்கிய ஆட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்னும் அடிப்படையில் அமைதல் வேண்டும். இத்தகைய தீர்வை சிங்கள மக்களிடையே பிரச்சாரம் செய்வதோடு, அரசின் உள்ளேயும் வெளியேயும் உள்ள அரசியல் தீர்வு ஒன்றை பேச்சு வார்த்தை மூலம் காண்பதற்கு தயாரான நியாய புத்தியுள்ள சக்திகளை பலப்படுத்த வேண்டும்.

1983 ஜூலைக்குப் பின்னர் வரும் முதலாவது மே தினமான இந்த மே திருநாளில்

தொடர்ச்சி 18-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்

தொடர்: 3

## பொய்மை நான்கு:-

(2) சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் உழைத்துக் கை நிறையக் காசு சம்பாதிக்கின்றனரா தோட்டத் தொழிலாளர்?

சில இனவாத அரசியல்வாதிகள் ''பாருங்கள் தோட்டத் தொழிலாளரை......! சிறுவர்கள் கூட சம்பாதிக்கிறார்கள். எமது சிங்கள மக்கள் தான் வேலையின்றித் திண்டாடுகிறார்கள்'' என்று கூறுகிறார்கள் அரசாங்கப் புள்ளி விபரத் திணைக்களம் கூட இதே விதமான விபரங்களைத் திட்டமிட்டு வெளியிடுகிறது. உதாரணத்திற்கு ''1981/82 உழைப்போர் பற்றிய சமூக பொருளாதார ஆய்வு என்ற வெளியீட்டைப் புரட்டினால் கல்வி, மரண விகிதம் போன்ற வேறெந்தத் தொகுதியிலும் தோட்டப் புறத்தைத் தனியாக எடுத்தோ, இனரீதியாகவோ ஆராயவில்லை. ஆனால் 24-ம் பக்கத்தில் 'வேலையற்றோர்'' என்ற தலைப்பில் மாத்திரம் இனரீதியாக வகுத்து ''வேலைஅற்றோரில் 83.5 விதம் சிங்களவர், இலங்கைத் தமிழரில் இது 9.2 வீதம். இலங்கை முஸ்லிம்களில் 6.2 வீதம் இந்தியத் தமிழர்களில் 1.5 வீதம்' என்று கூறுகிறது.

இதன் உண்மையான காரணத்தைக் கல்வி என்ற உபதலைப்பில் மேலும் விளக்குவோம். தற்போதைக்குச் சில விபரங்களை மாத்திரம் ஆராய்வோம் இன்று தோட்டத் துறையில் தான் சிறுவர் உழைப்பு அதிகமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. சிறுர்களை வேலைக்கமர்த்துவதை தடை செய்யும்சர்வதேசச் சட்டங்கள் இருந்தும். 14 வயது வரை கல்வி புகட்டுவது கட்டாயம் என்ற சட்டம் இருந்தும் கூட மலையகத் தமிழரின் பிள்ளைகள் பெருந்தோட்ட துறை

மாவலியான்

தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் இன்று 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட உழைக்கும் பெண்களில் 62 வீதத்தினர் தோட்டத்துறை பெண்கள் என்று அரசாங்கப் புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது.

இத் நிலைமை மலையகத் தொழிலாளரின் நிலையைக் காட்டுகிறதா? இல்லவே இல்லை. மாறாக அவர்களது வறிய நிலைமையைக் காட்டுகிறது. மேலே நாம் பார்த்தது போலத் தமது உழைப்பால் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள முடியாமல் திண்டாடும் மலையகத் தொழிலாளரால் தமது பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத வறிய நிலைமையும் கல்வித்துறையில் அவர்களுக்கு காட்டப்படும் பாரபட்சமுமே இந் நிலைக்கான காரணம். அதனால் வசதி படைத்தோரின் பிள்ளைகள் படித்துக் கொண்டும் ஓய்வு நேரத்தில் கிரிக்கெட் விளையடிக் கொண்டும் மகிழ்ச்சியாக இருக்கும் போது அந்நியச் செலவாணியைச் சம்பாதித்துக் கொடுப்போரின் பிள்ளைகளோ சுரண்டிப் பிடித்துப் புல் செதுக்கிக் கொண்டோ அல்லது மலைக் காட்டில் வேலை செய்யும் தமது பெற்றோருக்கு உறுதுணையாக தமது தம்பி தங்கைகளைப் பராமரித்துக் கொண்டோ, கல்வி அறிவற்ற மற்றொரு தலைமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய சமூக அநீதியைத் தான் இனவாதிகள் இவ்வாறு சித்திரம் போட்டுக்காட்டுகின்றனர்.

(3) மலையகத் தமிழ்த் தொழிலாளர் காதிலும் கழுத்திலும் நிறைய நகை போட்டிருக்கின்றனர். எனவே வறியவர்கள் அல்ல. என்ற பிரசித்தி பெற்ற கூற்றை இனி ஆராய்வோம்.

உண்மைதான். மலையகத் தமிழருக்குத் தங்க ஆபரணங்கள் மீது அலாதிப் பிரியம் இருப்பதை மறுக்க முடியாது தான், ஆனால் கேள்வி இது தான்; ''அது அவர்களது செல்வா தாரத்தை மதிப்பிடும் அளவுகோலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு விடையை ஒருநூற்றுண்டுக்கு முன்னரே கார்ல் மார்க்ஸ் தனது இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சி'' (The Br tsh Rule in India) என்ற கட்டுரையில் தந்துள்ளனர்: -

''இந்திய சமூதாயதில் ஆபரணங்கள் மீதான பிரியம் (love of finery) மிக அதிகமாகக் காணப்படுகிறது. அரை நிர்வாணமாகத் திரியும் அடிகிழ் மட்ட மக்களிடம் கூட the lowest class who go ab--out nearly naked) ஒரு சோடி தங்கக்காதணியும், கழுத்தில் ஒரு நகையும் உண்டு. கால் விரல்களிலும் கை விரல்களிலும் மோதிரங்களைச் சாதாரணமாகக் காணலாம். பெண்களும், சிறுர்களும் பொதுவாகக் கையில் பெரிய வளையலும், கால் மணிக்கட்டில் தங்கத்தாலான அல்லது வெள்ளியிலான சிலம்பும் (ankl st) அணிந்துள்ளனர் தங்க அல்லது வெள்ளி கடவுள் விக்கிரகங்களை அவர்களது வீடுகளில் காணமுடியும்.''

ஆம்; மீளா வறுமையில் அரைப்பட்டினி கிடந்து, அரை நிர்வானமாக திரியும் அடி கீழ் மட்ட வர்க்கத்தைச் சேர்ந்த மலையகத் தமிழ்த் தொழிலாளரிடமும் இத்தகைய ஆபரணங்கள் மீதான அலாதிப் பிரியம் காணப்படுகிறது. கஞ்சிக்கு வழியற்ற கபோதிகளிடமும் காதிலே ஒரு சோடி நகை இருக்கும். இது அவர்களது வழக்கம். பரம்பரை பரம்பரையாக வழிவந்த கலாச்சாரத்தின் ஒரு வடிவம். எனவே இதனை ஒரு மரபு ரீதியான பழக்கம் என்று தான் புரிந்து கொள்ள வேண்டும். செல்வ வளத்தினைக் காட்டும் ஒரு அடையாளச் சின்னமாகக் கருத முடியாது. வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்தில் ஆபரணங்கள் செல்வத்தின் ஒரு சின்னமாகத் திகழ முடியும். ஆனால் கலாச்சாரத்தில் பின் ஓங்கிய ஒரு சமூகத்தில் அவை குலவழி வந்த பழக்கமாகவே திகழ்கிறது, திபேத்தியர், செவ்விந்தியார் போன்ற மக்களிடம் காணப்படும் ஆபரண மோகங்கள் இத்தகையினவே.

ஆபரணம் சம்பந்தமாக இன்னும் சில விபரங்களைப் பார்ப்போம். இத் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இவ் விபரம் தரப்படுகிறது.

I. முன்னரே மிக மோசமான அடிமைத் தனத்தில் வாழ்ந்தாலும் இன்றைய மலையகத் தொழிலாளரின் முந்தைய தலைமுறையினரால் சிறிது பணம் சேகரித்துத் தங்க, வெள்ளி ஆபரணங்கள் வாங்க முடிந்தது. தங்கத்தின் விலை குறைவாக இருந்தது இதற்கான பிரதான காரணம். ஆனால் இன்றைய மலையகத் தொழிலாளர் தமது முன்னோர்களின் ஓரே சேமிப்பான இந் நகைகளையும் இன்று விற்றுத் தான் வயிறு வளர்க்கின்றனர். 1973-ம் ஆண்டின் பின்னர் இவர்களின் மத்தியில் நகை வாங்கும் சக்தி வெகுவாகக் குறைந்து வருகிறது. அதாவது இன்று எஞ்சியிருக்கும் ஒரு சில நகைகள் கூட 78 சதவீதம் பரம்பரைச் சொத்து.

II. 1973, 75 பஞ்ச காலத்தில் இவர்களது தங்க ஆபரணங்களில் 73% மாத்திரமல்ல 60% ஆன செப்பு பித்தளைப் பாத்திரங்கள் கூட (எச்சில் படிக்கம், வெற்றிலைத் தட்டு, தாம்பாளம் போன்ற வீட்டுப பாத்திரங்கள்) விற்கப்பட்டு விட்டன.

III. இன்று (1981 செப்) 87% ஆன பெண்களின் கழுத்தில் தாலி இல்லை. அதற்குப் பதில் மஞ்சள் கயிறு தான் உள்ளது.

IV. இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது எஞ்சியுள்ள நகைகளில் 89% மானவை ஈடு வைக்கப்பட்டிருந்தன. இதய மற்ற ஈட்டுக்காரர் இவர்களிடம் இரட்டை வட்டி அறவிடுவது பொதுவான வழக்கமாகக் காணப்பட்டது அதாவது பெப்ரவரி 27ந் திகதி ஈடு வைத்த ஒரு நகையை மார்ச் 6ந் திகதி [7 நாட்களில்] மீட்பதாக இருந்தாலும் பெப்ரரி, மார்ச் ஆகிய இரு மாதங்களுக்குரிய வட்டியைச் செலுத்தியாக வேண்டும்.

V. வங்கி வசதிகள் எல்லா இடங்களிலும் மலையகத்தில் கிடையாது. வங்கிகள் உள்ள இடங்களில் கூட இவர்கள் ஈட்டுக் கடையையே நாடுகின்றனர். இதற்கான இரு பிரதான காரணங்கள்:- ஒன்று இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வேலை விடும் நேரம் வங்கி மூடப்பட்டிருக்கும். இரண்டு:- மொழிப் பிரச்சனை யும், வங்கி ஊழியர் இவர்களை நடத்தும் விதமும். எனவே, நகைகள் கூட இவர்களை வட்டிக்காரர் சுரண்டுவதற்கான ஒரு சாதனமாகத் திகழ்கிறது.

கூட்டு மொத்தமாக ஆராயுமிடத்து இம் மக்களிடையே நிலவி வந்த மரபு ரீதியான பழக்கம் - ஆபரணங்கள் மீதான பிரியம் - இன்று வறுமையால் அழித்தொழிக்கப்பட்டு வருகிறது.

எனவே வகுப்புவாதிகள் என்னதான் மலையகத் தொழிலாளரின் நிலையைத் திரித்துக் கூறினாலும் உண்மையில் அவர்களது வாழ்க்கைத் தரம் முழு இலங்கைக்குமே ஒரு அவமானம். நாகரிக மனித சமுதாயமே நாணித் தலைகுனிய வேண்டிய நிலையில் அவர்கள் கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள் என்பதை மேலும் சற்று விரிவாகப் பார்ப்போம்.

## (1) வாழ்க்கைத்தரம்:-

I ஐ பி ரீ எஸ். [The Institute for Techno studies] இந்தியாவுக்குத் திருப்பிச் செல்லும் மலையகத் தமிழர் பற்றி நடாத்திய ஆய்வு ஒரு பொதுவான சித்திரத்தைத் தருகிறது. இவ் ஆய்வின்படி 84 வீதத்தினர் தோட்டத் தொழிலாளர். 3 வீதத்தினர் மாத்திரமே 10,000/- வுக்கு அதிகமான பெறுமதி வாய்ந்த உடமைகள் கொண்டிருப்பவர்.

II. 40 தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட எமது ஆய்வின்படி வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் தவிர்ந்த [இவர்களது தொகை சுமார் 7 வீதம்]. ஏனைய தொழிலாளரை மூன்று பிரிவில் அடக்கலாம்

(அ) மேலதிக வருமானம் உள்ள குடும்பங்கள்:- 3 சதவீதம் இவர்கள் பசு வளர்ப்பு, மரக்கறிப் பயிர்ச்செய்கை அல்லது சிறிய அளவிலான வியாபாரம் போன்ற ஏதாவது ஒரு வழியில் மேலதிக வருவாய் பெறுகின்றனர். இவர்களது சராசரி உடமையின் பெறுமதி 10 000/- க்கு மேல் இவர்களிடம் ரேடியோ, நகைகள் ஆகியனவும் கையில் சிறிதளவு மூலதனமும் உண்டு. இவர்களது பிள்ளைகள் நல்ல பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள்.

(ஆ) ஓரளவு சமாளிக்கக்கூடிய குடும்பங்கள்:- 11 வீதம் இவர்களுக்கு மேலதிக வருமானம் பெறக்கூடிய வாய்ப்புகள் எதுவும் கிடையாது. குடும்பத்தில் பெரும்பாலான அங்கத்தவர்கள் உழைப்பதாலும், மிகக் குறைந்த எண்ணிக்கையில் இவர்களைச் சார்ந்திருப்போரின் தொகை இருப்பதாலும் தோட்டத்திற்கு வெளியிலும் ஒரு சிலர் வேலை செய்து மேலதிகமாகச் சம்பாதிப்பதாலும் இக்குடும்பங்கள் சமாளிக்கக்கூடிய நிலையில் உள்ளன. சிறிதளவு பரம்பரை நகைகளை இக்குடும்பங்கள் காப்பாற்றி வைத்துள்ளன. அநேகமாக வானொலிப் பெட்டிகள் வைத்திருக்கிறார்கள். இவர்களது உடமை 5,000/- இல் இருந்து 10,000/- வரை.

(இ) வறுமை மட்டத்திற் கீழ் வாழ்வோர். 86% இக்குடும்பங்கள் தோட்டத் துறையில் நிலவும் மிகக் குறைவான வாழ்க்கைத் தரத்தைக் கூடச் சமாளிக்க முடியாமல் அன்றாட நாளைக் கழிப்பதற்குப் போராடுகிறார்கள். இவர்களின் உடமை 5,000/- ரூபாவுக்குக் கீழ்.

## (2) சம்பளம்:-

தோட்டத் தொழிலாளருக்கு மாதமொரு முறை சம்பளம் வழங்கப்பட்டாலும் வேலை செய்த நாட்களுக்கு மாத்திரம் ஊதியம் வழங்கப்படுகிறது. மாவட்டத்திற்கு மாவட்டம், கால நிலை மாற்றத்திற்கும், நிலத்திற்கு நிலமும் விளைச்சல் வேறுபடுவதால் இவர்களது வேலை நாட்களும் வேறுபடும். அரசாங்கம் 1978 ஏப்ரலில் மேற்கொண்ட ஆய்வொன்றின் படி நான்கு உயர் நிலத் தோட்டங்களில் வாரத்திற்கு 4 முதல் 5 நாள் வரை, 5 இடை உயர் நிலத் தோட்டங்களில் 4 முதல் 4 1/2 நாட்களும், 3 தாழ் நிலத் தோட்டங்களில் வாரத்திற்கு 3 முதல் 4 நாட்கள் வரையிலும் வேலை வழங்கப்பட்டன.

1974-ல் தோ. தொழிலாளரின் வேலை நாட்களை "ஒழுங்கு" படுத்துவதற்கான சட்டம் ஒன்று அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. இதன் படி நிர்வாகம் வருடத்திற்கு 218 நாட்கள் அல்லது 6 மாதத்திற்கு 109 நாட்கள் வேலை வழங்கியாக வேண்டும். இச் சட்டம் மாதம் 18 நாட்களுக்குக் குறையாமல் வேலை வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று வலியுறுத்தவில்லை இதனால் விளைச்சல்கூடிய மாதங்களில் கூடிய நாட்களும், விளைச்சல் குறைச்சலான மாதங்களில் குறைவான நாட்களும் வேலை வழங்கித் தோட்டத்தின் லாபத்தை அதிகரிக்க நிர்வாகத்திற்குக் கூடுதலான வாய்ப்பை இச் சட்டம் கொடுத்துள்ளது. இதனால் வேலை குறைவாயிருக்கும் மாதங்களில் தொழிலாளர் தோட்டத்திற்கும், வெளியாருக்கும் கடன் பட நேருகிறது.

இதை விடத் தோட்டத் துறையில் ஆண், பெண் என்ற பால் அடிப்படையில் சம்பள மட்டம் வேறுபடுத்தப்பட்டுள்ளது. இதன் படி ஆண்களை விடப் பெண்களுக்கு குறைவான சம்பளம் (சுமார் 20%) வழங்கப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் விளைச்சல் கூடிய காலங்களில் கொழுந்து பறிக்கும் வேலையில் ஆண்களும் ஈடுபடுத்தப்படுவர் (பெரும்பாலும் பெண்களுக்கே இவ் வேலை தரப்படும்- தேயிலைத் தோட்டத்திலுள்ள பெண் தொழிலாளரில் 93% கொழுந்து கொய்வோர்) ஆயினும் பெண்களுக்குக் குறைந்த கூலியே கொடுக்கப்படும். எனவே ஆண்களை விடப் பெண்களை ஈடுபடுத்துவது தோட்ட நிர்வாகத்திற்கு லாபகரமானது. ஆகையால் ஆண்களை விட பெண்களுக்கே அதிக நாட்களுக்கு வேலை தரப்படுகின்றன. இது இன்னொரு வகையான சுரண்டலாகும்.

## (3) உணவு:-

காலையில் ரொட்டியும், தேங்காய்ச் சம்பலும், வெறும் சாயமும் (சில சமயங்களில் கருப்பட்டி அல்லது சீனியுடன்) பத்து மணிக்கு மீண்டும் ஒரு சாயம், பகல் உணவு: பாண் அல்லது ரொட்டி தேங்காய்ச் சம்பலுடன் அல்லது சீனியுடன் இரவில் மாத்திரம் சோறு ஒரு கறியுடன் (இறைச்சிக் கறி மாதத்திற்கு 3 தடவைக்கு மேல் கிடையாது) இது தான் இவர்களது சராசரி உணவு. அநேகமான நாட்களில் அரைப் பட்டினி, முழுப் பட்டினி கிடந்தே காலத்தை ஓட்டுகின்றனர்.

இவர்களது நாளாந்த உணவில் தினசரி இவர்கள் கடும் உழைப்பில் இழக்கும் கலோரிச் சக்தியை மீட்டுப் பெறக்கூடிய சக்திகள் கிடையாது. இதனால் ஒரு தலைமுறையை விட அடுத்த தலைமுறை குள்ளமாகவும், பலவீனமாகவும் வளர்கின்றது. ஏனைய மக்கள் சமுதாயங்களோடு ஒப்பிடுகையில் இன்று இலங்கையில் மிகவும் உயரம் குறைவான மக்கள் மலையக மக்களே. முன்னர் பருப்பும், மாசியும் இவர்களுக்குக் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டன. இவற்றில் புரோட்டீன் அதிகம். தற்போது அவை வழங்கப்படாததால் இவர்களது உணவில் சேரும் புரோட்டீனின் அளவு மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந் நிலைமைகளால் இலங்கையில் இன்று மிகக் கூடுதலான மந்த போஷாக்கு வீதம் தோட்டத் துறையில் காணப்படுகிறது.

## (4) உடை:-

தீபாவளிக்கொரு முறை தான் இவர்கள் புத்தாடைகளைக் காண்கிறார்கள். மலையகத்தில் உள்ள சிறு நகரங்களில் துணிக்கடைகளிலே தற்போது பெருமளவான வியாபாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. எல்லாத் தோட்டப்புற நகரங்களிலும் பழைய துணிமணிகள் விற்கும் கடைகள் தற்போது திறக்கப்படுகின்றன. புதிய, துணிக் கடையை விட பழைய துணிமணிகள் சுமந்து செல்லும் அங்காடிகளுக்கே இன்று மலையகத்தில் கிராக்கி.

இலங்கையில் வேறெந்தத் தொழிலாளரையும் விடக் காலநிலை மாற்றங்களுக்குத் தோட்டத் தொழிலாளரே நேரடியாக முகங் கொடுத்து வருகின்றனர். இவர்கள் கூரையின் கீழ் வேலை செய்யவில்லை. எனவே காற்று, மழை, பனி, வெயில் ஆகிய சகல காலநிலை மாற்றங்களும் இவர்களைப் பாதிக்கின்றன இந்த மாற்றங்களைச் சமாளிக்கக் கூடிய விசேட ஆடைகள் இவர்களுக்குத் தேவை. ஆனால் அவற்றை அரசாங்கம் [தற்போது அரசாங்கமே அவர்களது முதலாளி] வழங்குவதில்லை. தோ.т. தொழிலாளர் அவற்றை வாங்கக் கூடிய நிலையில் இல்லை.

இது இவர்களது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் மற்றொரு காரணியாகும். தோட்டத் தொழிலாளர் மத்தியில் இதயம் சம்பந்தமான புரொன்கைட்டிஸ், நியூமோயானி போன்ற நோய்களே பொதுவாகக் காணப்படுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதை. இதற்கான அடிப்படைக் காரணம் காலநிலையைச் சமாளிக்கக் கூடிய ஆடைகள் இன்மையே.

## (5) வீட்டு வசதி:-

மலையகத் தமிழருக்கு வீட்டுப் பிரச்சனை கிடையாது என்பது வகுப்பு வாதிகளின் மற்றொரு பிரச்சாரமாகும். உண்மையில் இவர்களுக்கெனச் சொந்தமான வீடுகள் கிடையாது நிர்வாகத்தில் வழங்கப்படும்லைன் அறைகள், அந்த அறையில் குடியிருக்கும் குடும்பத்தில் ஆகக் குறைந்தது ஒருவர், தோட்டத்தில் வேலை செய்யா விட்டால் பறிமுதலாகும்.

### லைன் காம்ரா:-

ஒரே தகரக் கூரையின் கீழ் முன்னும் பின்னுமாக 18 முதல் 40 வரையிலான [10'x12'] 120 சதுர அடி விஸ்தீரண முள்ள அறைகளைக் கொண்டவை. காற்றோட்டமோ, சூரிய வெளிச்சமோ இல்லாத காரணத்தினால் வழங்கப்பட்ட இந்த 120 ச. அடி காம்பராவில்தான் தோட்டத் தொழிலாளர் வாழ்கின்றனர். இவ் அறைகளுக்கு மின்சாரம் கிடையாது. வருடா வருடம் சுண்ணும்பு அடிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் நிர்வாகம், நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆனல் அப்பணம் நிர்வாகிகளின் சட்டைப்பைக்குள் போய்விடுகிறது. எமது ஆய்வின்படி 40 தோட்டங்களில் 8 தோட்டங்களில் மாத்திரமே இரண்டு வருடத்திற்கு ஒரு முறை வெள்ளை [பெயருக்குப்] பூசப்படுகிறது. 22 தோட்டங்களில் நான்கு வருடமாகியும் இன்னும் வெள்ளை பூசப்படவில்லை. 4 தோட்டங்களில் எப்போது சுண்ணும்பு பூசப்பட்டது என்ற விபரம் யாருக்குமே சரியாகத் தெரியாது. ஒரு ஜனவாசம நிதி ஒதுக்கீடு செய்தது. நிர்வாகம் அதே தகரத்திற்குப் பெயிண்ட் அடித்துவிட்டு அந்தக் கொள்கையை அபேஸ் பண்ணியது.

✲ மாட்டுத் தொழுவத்தை விடவும் படுமோசமான இந்த ஒரே லைன் அறைகளிலேதான் பெற்றோரும், கைக்குழந்தைகளும் பருவமடைந்த பெண்பிள்ளைகளும் ஒன்றுகப்படுத்துறங்குகின்றனர். இதனல் தொற்று நோய்கள் பரவுவது ஒருபுறம். ஒழுக்கக் கேடுகள் ஏற்படுவதற்கும் இது ஒரு ஊற்று மூலமாக மறு புறத்தில் அமைந்து விடுகிறது.

✲ திருமணமானதும் புதுக் குடும்பத்திற்குத் தனி லைன் அறைகள் வழங்க வேண்டும் எனச் சட்டம் இருக்கிறது. ஆனல் சில தோட்டங்களில் இந்தச் சிறு அறையையே சாக்கினல் பிரித்து இரு குடும்பங்களுக்கு நிர்வாகம் கொடுத்துள்ளது

✲ இந்த லைன் முறை மனிதன் வாழ்வதற்கு ஏற்றதல்ல என மாறிமாறி வந்த இரு அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. பல சர்வதேச நிறுவனங்கள், ஐ. நா. ஸ்தாபனங்கள் உட்பட, இந்த லைன் அறைகளைக் கண்டித்துள்ளன. ஆயினும் 1950 களில் இத்தகைய லைன் அறைகள் கட்டுவதைத் தடைசெய்யும் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றிய போதும் கூட இதுவரை [1981ல்] புதிதாக வீடு கட்டிக்கொடுக்கும் வேலை 31 வருடங்களாகியும் 02 வீதம் கூடப் பூர்த்தியாகவில்லை. சில லைன் அறைகளில் 17 பேர் வாழவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை காணப்படுகிறது.

✲ 1973ல் மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி பற்றிய ஆய்வொன்றின் பிரகாரம் நகரப்பகுதியில் 35 வீதமான வீடுகளிலும் அளவுக்கதிகமான ஆட்கள் வசித்து வந்தனர். ஆனல் தோட்டத் துறையில் மாத்திரம் இது 75 வீதமாகக் காணப்படுகிறது.

✲ சில ஆண்டுகளுக்கு முன் ஒரு லைன் அறை உடைந்து விழுந்ததால் 40 பேர் உயிரிழந்தனர் என்று "பெண்ணின் குரல்" கூறுகிறது.

✲ 74 ம் ஆண்டளவில் தொண்டமானுக்குச் சொந்தமாயிருந்த டெவன் தோட்டத்தில் ஏற்பட்ட சிறு மண்சரிவுக்கே இரு லைன்கள் அள்ளப்பட்டுவிட்டன. 14 பேர் அகால மரணமடைந்தனர். அவ்விரு லைன்களும் சற்று உறுதியாகக் கட்டப்பட்டிருந்தால் கூட அவ்வுயிர் இழப்பு நேர்ந்திருக்காது.

✲ சர்வதேச நிறுவனம் ஒன்று நுவரெலியா தேர்தல் தொகுதியிலுள்ள 'தங்கக்கெலை' என்ற தோட்டத்தில்

தொடர்ச்சி 21-ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும், சோஷலிசத்திற்கான பாதையும்

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி - *NLFT*

எமது தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய சரியான கருத்துக்கள் மக்கள் மத்தியிலும் விடுதலைப்போராளிகள் மத்தியிலும் காணப்படாதது பிரதான குறைபாடாகும் தேசிய விடுதலைப்போராட்டம். அதன் சிறப்பான குணாம்சம் என்பவை பற்றி அரை குறையாகவோ அல்லது எதுவுமே தெரியாமலோ, இன்றைய எமது விடுதலை இயக்கங்கள் பல தவறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இச்சூழலில் நாங்கள் 'தென்னாசியச் சூழ்நிலையில் தமிழீழப்போராட்டமும் சோஷலிசத்திற்கான பாதையும்' எனும் தலைப்பில் எமது விடுதலைப் போராட்டத்தைநாம் நோக்கலாம்.

## கருத்துக் களம் . . .

கருத்துக் களம் . . .

கருத்துக் களம் . . .

இன்றைய உலகம் ஏகாதிபத்தியங்களினதும், ஏகாதிபத்திய எதிர்ப் புரட்சிப் போராட்டங்களினதும் உலகமாகும். ஏகாதிபத்தியங்கள் தமது ஏகபோக நிதி மூலதனத்தின் சர்வ வல்லமை பெற்ற தன்மை காரணமாக உலக மக்களை ஆக்கிரமித்தும், சுரண்டியும், படைப் பலத்தால் அச் சுறுத்தியும் வருகின்றன. ஏகாதிபத்தியங்களின் இந்த கொடிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உலக மக்கள் பல வீரம் செறிந்த போராட்டங்களையும் நடாத்தி வருகிறார்கள். ஏகாதிபத்தியங்களிற்கும் உலக மக்களின் புரட்சிகர விடுதலைப் போராட்டங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளே இன்றைய உலக அரசியலாகும். நாங்கள் இதிலிருந்து தெற்காசியாவை விலத்திப் பார்க்க முடியாத நிலையில் இருக்கின்றோம். இன்றைய உலகின் இரு பெரும் ஏகாதிபத்தியங்களான அமெரிக்க, ரஷ்யா ஏகாதிபத்தியங்கள் தம்முள் நடத்தும் மோசமான போட்டா போட்டிகள் அனைத்துலக மக்களையும் பாதிப்பதாக அமைந்துள்ளன. இது தென்னாசியாவுக்கும் பொருந்தும்.

இந்த இரு வல்லரசுகளின் போட்டியானது தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவை மையமாக வைத்துச் செயல்படுகிறது. அமெரிக்கா இந்தியாவைச் சூழவுள்ள இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளை தனது சார்பு நாடுகளாக்கிக் கொண்டுள்ளது. இவற்றின் மூலமாக இந்திய உபகண்டத்தை தனது முழுமையான சார்பு நாடாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இந் நோக்கில் இந் நாடுகளை இராணுவ ரீதியில் பலப்படுத்தியும் வருகின்றது. இந்து சமுத்திரத்திப் பிராந்தியத்தை தனது கேடு கெட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தும் முயற்சியாகவே இத்தகைய செயல்களில் அது ஈடுபட்டு வருகிறது.

இந்தியாவோ ரஷ்யாவை சார்ந்து நின்று தனது பாதுகாப்பை உறுதி செய்துள்ளதுடன் அண்டை நாடுகளை தனது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் விஸ்தரிப்புவாத நோக்குடன் செயற்பட்டு வருகிறது. சோவியத் தனது மேலாதிக்கத்தை இந்தியா மீது நிறுவவும், அதற்கூடாக அண்டை நாடுகளை தனது செல்வாக்கு மண்டலங்களாக்கவும் முயல்கிற அதே வேளை இந்தியா தானொரு வல்லரசாக வளரவும், சோவியத்தின் இந்த ஆசையைப் பயன்படுத்தி தென்னாசியாவின் பலமான சக்தி உருவாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்று வருகிறது. இந்த அடிப்படையிலேயே அது அமெரிக்காவுடனும், ரஷ்யாவுடனும் மாறி, மாறி உறவுகளைப் பேணி வருகிறது. இரு பக்கமும் ஆசை காட்டி தான் தனது நோக்கினைச் சாதிக்கும் (விஸ்தரிப்பு வாத) விதத்தில் செயல்பட்டு வருகிறது. எப்படியாயினும், இந்த இரண்டு போக்கின் மத்தியில் இந்தியா தனது அண்டை நாடுகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை இங்கு அமெரிக்க சார்பு அரசு நிலவுவதால், அந்த அரசுக்கு நெருக்கடியையும், அச்சுறுத்தலையும் செய்வதன் மூலமாக தனது மேலாதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு நாடாக இலங்கையை உருவாக்குவதே இந்தியாவின் பிரதான நோக்கமாகும். ஆனால் இலங்கையின் இன்றைய நிலைமையும், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டமும் அதற்கு இடந் தராதிருப்பின், இங்கு நடைபெறும் போராட்டத்தினூடாக தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதே இந்திய அரசின் திட்டமாகும். அதன் காரணமாகவே இங்கு நடைபெறும் விடுதலைப் போராட்டத்தின் ஆதரவு சக்தியாக தன்னை இனம் காட்டி வருகிறது. இலங்கை முழுவதையும் தனது கைக்குள் போட முடியாவிட்டால், பிரியப்போகும் தமிழீழத்தையாவது தனக்கு சாதகமாக்கிப் பயன்படுத்திக் கொள்வது இந்திய அரசின் திட்டமாகும்.

இந்தியா நமது போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பது தனது விஸ்தரிப்பு வாத நோக்கிலும் தமிழ் நாட்டு அரசியலை தனக்கு சாதகமாக பயன்படுத்துவதற்குமேயன்றி, ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் மீதான கருணையினால் அல்ல, ஒடுக்கப்படும் தேசிய இனங்களில் உண்மையான அக்கறை காட்டும் நாடாக இந்தியா இருக்குமானால் அது தனது சொந்த நாட்டிலேயே உரிமைக்காகப் போராடும் பல தேசிய இனங்களை சேர்ந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டியிருக்கும். அசாம், பஞ்சாப் முதலிய மாநிலங்களில் உள்ள பிரச்சினைகள் இன்றுவரை தீர்க்கப்படாததாகவே உள்ளன.

இத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை அறியாது, பிற்போக்கான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றி, மக்கள் மத்தியிலுள்ள சிறு முதலாளியக் கருத்துக்களை மேலும்பலமாக்கி அவர்களைப் பார்வையாளர்களாக உருவாக்குகின்றது. தேசிய விடுதலை என்பது உண்மையில் சகல வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும், அவற்றின் சார்பாக உள் நாட்டிலுள்ள பிற்போக்கு ஆளும் வர்க்கங்களிடமிருந்தும் பரந்துபட்ட மக்கள் தமது விடுதலையை காத்துக்கொள்வதாகும். இந்த விடுதலைக்கான யுத்தமானது பரந்துபட்ட மக்களின் புரட்சியொன்றாலேயே சாத்தியமாக்கப்படமுடியும்.

இலங்கையின் இன்றைய அரசியலானது அமெரிக்கா ஏகாதிபத்திய சார்பு தரகு முதலாளிய நிலப்பிரபுத்துவ பிற்போக்காளரின் அரசாகும். இந்தப் பிற்போக்காளரின் பெருந்தேசிய இனவெறிப் போக்கானது தமிழ் தேசிய இனத்தின் விடுதலையை வரலாற்று அவசியமாக்கி உள்ளது. தேசிய விடுதலை என்பது உண்மையில் ஏகாதிபத்திய உள்நாட்டு ஆளும் வர்க்க கூட்டுச் சதியாளர்களிடமிருந்து மக்கள் தம்மை முழுமையாக விடுவித்துக் கொள்ளுதலாகும். எல்லா வகையான வல்லரசுச் சுரண்டல்களையும் எதிர்த்து மக்கள் தமது சொந்த நிலத்தில் தமது அரசை நிறுவுவதும் தமது சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் வென்றெடுப்பதும் ஆகிய கடமைகளைக் கொண்டதுமாக இத் தேசிய விடுதலைப் போராட்டம் அமையும். தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு தேசத்தின் முழுமையான விடுதலையை நல்குவதாக அமையும். தமது சொந்த அரசியலை அந்நாட்டு மக்களே தீர்மானிக்கும் முழுமையான உரிமையை பெறுவதாக அமையும்.

இத்தகைய தேசிய விடுதலைப் போராட்டத்தை யார் தலைமை தாங்கி நடத்துவது அல்லது எப்படி சோஷலிசப் போராட்டத்தை நோக்கிச் செல்வது என்பதில்தான் இதன் முழுப் பிரச்சினைகளுமே அடங்கியிருக்கிறது. இதில் நாம் இரண்டு விடயங்களை கவனத்தில் எடுத்தல் வேண்டும். அதாவது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பொதுவாக யார் தலைமை தாங்கமுடியும்? எமது குறிப்பான சூழ்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தலைமை எப்படிப்பட்டதாக இருக்கமுடியும்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் மாவோயிசம் தெளிவான விடைகளைக் கூறுகிறது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பொதுவான வரைவிலக்கணத்தில், அந்த விடுதலைப் போராட்டத்தை யார் முன்னெடுப்பார்கள் என்ற பொதுவான கேள்விக்கு தேசிய முதலாளி வர்க்கம் என்ற பதிலே கிடைக்கும். ஏனெனில் எப்போதும் தேசியவாத கோசங்களை எழுப்புவதில் முதலாளி வர்க்கமே முன் நிற்கும். தேசிய விடுதலைக் கோசம் முதலாளித்துவக் கோசமாகவே இருந்துவரும். முதலாளி வர்க்கம் தனது சொந்த வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்டு தேசத்தைப் பிரித்துக்கொள்வதற்காக பல போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டுள்ளது. முதலாளிவர்க்கம் பலமானதாகவும், தேசியத் தன்மை மிக்கதாகவும் இருக்கும் சூழலில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் இவ்வாறே அமையும்.

இத்தகைய விடுதலையின் பின் அமையும். அரசானது முதலாளித்துவ ஜனநாயக அரசாக அமையும். இந்த முதலாளி வர்க்கம் தனது சொந்த நாட்டில் தேசப்பற்றை ஊட்டுவதிலும், அதை தனது தேவைகளுக்காகச் சுதந்திரமாகப் பேணுவதிலும் அக்கறையாக இருக்கும். ஆனால் ஏகாதிபத்திய காலகட்டத்தில் அதுவும் குறிப்பாக காலனி நாடுகளின் முதலாளி வர்க்கம் இத்தகைய தன்மைகளற்ற ஒரு புது வர்க்கமாக உருமாறியிருக்கும். அதாவது தனது சொந்தத் தேசிய நலனின் காரணமாக இவ்வர்க்கம் பெறும் இலாபத்தை விடவும் அது தன்னை ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்கமாக - தரகு முதலாளி வர்க்கமாக மாற்றிக்கொள்வதன் மூலம் அதிக இலாபங்களைப் பெறுகிறது. ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காலனிய நாடுகளில் உள்ள முதலாளி வர்க்கம் தரகுத் தன்மை கொண்டதாக, ஏகாதிபத்திய விசுவாச சார்புப் போக்குக் கொண்டதாக இருப்பதால் புரட்சிகரத் தன்மையற்றதாக இருக்கிறது. தேசப்பற்று அற்றதாக, தேச விடுதலையைக் காட்டிக் கொடுக்கக்கூடியதாக அமைந்திருக்கிறது இங்குள்ள மிகச் சிறிதளவு தேசிய உணர்வு பெற்ற முதலாளி வர்க்கமும், மிகவும் பலவீனமானதாகவும் அதுவும் ஏகாதிப்பத்திய சார்பு நிலையை எடுக்கக்கூடிய தடுமாற்றம் கொண்டதாகவுமே இருக்கும். இதன் காரணமாக இந்த முதலாளி வர்க்கத் தலைமையானது தேசிய விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கமுடியாது. அப்படி அது தலைமை தாங்குமாயின் காட்டிக்கொடுப்புகளிலும், சமரசங்களிலும் தொடர்ந்தும் ஈடுபட்டுவரும் என்பதில் ஐயமில்லை

இந்திய சுதந்திரப் போரில் தலைமை தாங்கிய இந்திய நிலப்பிரபுத்துவ முதலாளி வர்க்கமானது தனது போராட்டத்தை உறுதியான போராட்டமாக முன்னெடுப்பதற்குப் பதில் தடுமாறுவதாகவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்வதுமாகவே அமைந்திருந்தது. இதன் காரணமாகவே அங்கு கிடைத்த சுதந்திரமும் உண்மையான சுதந்திரமாக அல்லாது பேரளவிலான சுதந்திரமாக, இந்திய முதலாளிகளுக்கு வாய்ப்பான சுதந்திரமாக உருவாகும் விதத்தில் இந்திய விடுதலை அநியாயமாக காட்டிக்கொடுக்கப்பட்டது.

எமது சொந்த நாட்டிலும் கூட தமிழ்மக்களின் தலைமை தனது பிற்போக்கு முதலாளிய நலன் காரணமாக போராட்டத்தில் புரட்சிகர இயல்பை இல்லாததாக்கி சமரசப் பாதைக்கு இட்டுச் செல்லவும், தமது சொந்த வர்க்க நலனைப் பேணவுமே முயன்று வந்ததை நாம் எமது அனுபவத்தில் கண்டுள்ளோம். எனவே எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமை சக்தியாக நிச்சயமாக முதலாளி வர்க்கம் இருக்கமுடியாது. தேசிய விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கவும் அதன் உண்மையான மக்களின் ஜனநாயகத்திற்கான அரசாக உருவாக்கவும் சக்தி வாய்ந்த வர்க்கம் பாட்டாளி வர்க்கம் மட்டுமே. மிகவும் அடிமட்ட மக்களான கூலி உழைப்பாளர்கள், கூலி விவசாயிகள் தலைமையில் மட்டுமே எமது விடுதலை வெற்றிகரமாக சாதிக்கப்படமுடியும். ஏனெனில் சுதந்திரத்தை உறுதியாகப் பெற்றெடுக்கவும் மக்களின் ஜனநாயக அரசை வென்றெடுக்கவும் எத்தகைய சமரசத்திற்கும் இடமில்லா விதத்தில் ஏகாதிபத்திய உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு ஆளும் வர்க்க கூட்டுச் சதியாளர்களை எதிர்த்துப் போராடும் சக்தியும், பலமும் இந்த வர்க்கத்திற்குமட்டுமே உண்டு.

பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடக்கப்போகும் தேசிய விடுதலைப் போராட்டமானது வெறும் தேசிய விடுதலையாக இல்லாமல் சகலவிதமான ஒடுக்குமுறைகளில் இருந்தும் மக்களை விடுவிக்கும் ஒரு புரட்சிகரமான போராட்டமாக இருக்கும். இத்தகைய போராட்டத்தில் உருவாகும் அரசு, ஒரு புதிய ஜனநாயக அரசு. இதுவே புதிய ஜனநாயகப் புரட்சி ஆகும்.

புதிய ஜனநாயகப் புரட்சி என்பது பாட்டாளி வர்க்கம் தனது தலைமையில் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி நிகழ்த்தும் புரட்சிகரப் போராட்டம் ஆகும். இது சோஷலிசத்திற்கான பாதையயாகும். சோஷலிச சமூக அமைப்பொன்றை அமைக்கும் நோக்கில் நடத்தப்படும் இப் போராட்டம் பாட்டாளி வர்க்கம் தனித்து நின்று ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராட முடியாமை காரணமாக அனைத்து மக்களையும் தனது தலைமையில் அணிதிரட்டி நடத்தும் போராட்டமாகும்.

அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிகளையும் தனது தலைமையில் ஐக்கியப்படுத்தி பாட்டாளிவர்க்கம் நடத்தும் இப்போராட்டம் பழைய முதலாளித்துவ அமைப்புமல்லாத, சோஷலிச அமைப்புமல்லாத ஒரு இடைப்பட்ட நிலையான புதிய ஜனநாயக அமைப்பாக அமையும். இந்த புதிய ஜனநாயக அரசில் பாட்டாளி வர்க்கஅரசியலதிகாரம், சோஷலிசத்தை நோக்கிய வளர்ச்சிக்கு உறுதி செய்வதாக அமையும்.

புதிய ஜனநாயக அரசின் கீழ் உறுதியான பாட்டாளி வர்க்க அரசியலுக்கான வர்க்கப் போராட்டத்தை நடத்துவதினூடாக முதலாளிய மீட்சி தடுக்கப்படும். இந்த புதிய ஜனநாயக அரசின் கீழ் சகல சமூக ஒடுக்குமுறைகளும் அழித்தொழிக்கப்பட்டு மக்களின் உண்மையான ஜனநாயக வாழ்வுக்கான வழி திறந்துவிடப்படும்.

எனவே இன்றைய இந்தக் காலகட்டத்தில், எமது குறிப்பான சூழலில் நாம் ஒரு சோஷலிச சமூக அமைப்பைக் கொண்ட தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டுமானால், புரட்சிகரமான பாட்டாளிவர்க்கத் தலைமையிலான மக்கள் யுத்தத்தை எமது யுத்த தந்திரமாக மேற்கொள்ளவேண்டும். அதன்மூலம் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியாக வென்றெடுக்கவேண்டும். சகலவிதமான சமூக அடிமைத்தனங்கள், ஒடுக்குமுறைகளையும் அழித்து மக்கள் ஜனநாயக வாழ்வை உறுதிசெய்யவும் சோஷலிச தமிழீழத்தை நோக்கி முன்னேறவும் இதுவே இதுமட்டுமே ஓரேவழியாகும்.

---

கேள்வி.- எப்படி நீங்கள் வலிமையுடையவர்களாய் மாறினீர்கள்?

பதில்:- எப்படியெனில், நாங்கள் ஜனநாயகத்தையும், நீதியையும் வலியுறுத்துகின்றோம். அத்துடன் மனித நேயத்தையும், தேசிய கௌரவத்தையும் பேணுகின்றோம். இவையனைத்தையும் விட நிக்கராக்குவாவின் மக்கள் கையில்தான் ஆயுதங்களுண்டு. இங்கே தனி இராணுவ வீரர்கள் இடையாது. ஆயுதம் ஏந்திய குடிமக்களே உண்டு எம்முடைய பிரச்சினை ஆயுதப் பற்றுக்குறையே தவிர, போராட்ட உணர்வு பெறாத மக்களல்ல.

- தளபதி ரோமஸ் போர்க் (நிக்கராகுவாவின் உள்துறை அமைச்சர்)

''World Third' எனும் இதழுக்கு அளித்த பேட்டியிலிருந்து -

நன்றி - ஈழம் 17-10-84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஸ்தாபனத்தில் அல்லது ஒரு போராட்டத்தில் தலைமைக்கும், மக்களுக்கும் இடையிலான ஒரு சரியான உறவு பற்றி கருத்து, தலைமையைப் பொறுத்தமட்டில் சரியான சிந்தனைகள் "மக்களிடமிருந்து, மக்களுக்கு" என்பதன் மூலம் தான் (அடையமுடியும்) என்ற கருத்து, தலைமையின் சிந்தனைகள் நடைமுறையில் செயல்படுத்தப்படும்போது பொதுவான அறைகூவல் குறிப்பான வழி காட்டுதலுடன் இணைக்கப்படவேண்டும் என்றகருத்து- இந்தக் கருத்துக்கள் எல்லாம் இப் பிரச்சினைகள் மீது நமது

லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; அதனால் அவர்களுடைய தலைமை அதிகாரத்துவ தன்மையுடையதாகவும், பரந்துபட்ட மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டதாகவும் ஆகிறது. அநேக தோழர்கள் பரந்துபட்ட மக்கள் போராட்டங்களின் அனுபவத்தைத் தொகுப்பதின் முக்கியத்துவத்தை பார்ப்பதில்லை, அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; மாறாக தங்களை புத்திசாலிகளாகக் கற்பனை செய்துகொண்டு, தங்களுடைய அக நிலைச் சிந்தனைகளை முன்னிலைப்படுத்திப் பேசு

அவர்களுடைய அறைகூவல் அவர்களுடைய உதடுகள் அல்லது காகிதம் அல்லது மாநாட்டு அறையுடன் மட்டுமே தங்கிவிடுகிறது; அவர்களுடைய தலைமை அதிகாரத்துவ தன்மையுடையதாக ஆகிறது. தற்போதைய சீர்செய் இயக்கத்தின்போது நாம் இத்தவறுகளைச் சரிசெய்துகொள்ள வேண்டும்; நமது ஆய்விலும், வேலைகளைப் பரிசோதிப்பதிலும், ஊழியர்களின் வரலாறுகளை ஆராய்வதிலும் தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கும் வழி முறைகளையும் பொதுவானதை

# தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சினைகள்

( சென்ற இதழ் தொடர் )

ஊழியர்கள் மத்தியில் நிலவுகின்ற தவறான கண்ணோட்டங்களை சரிசெய்வதற்காக நடத்தப்படுகின்ற தற்போதைய சீர்செய் இயக்கத்தின்போது எல்லா இடங்களிலும் பரப்பப்படவேண்டும். அநேக தோழர்கள், செயல்வீரர்களைக் கொண்டு ஒரு தலைமைக் கருவை உருவாக்குவதின் முக்கியத்துவத்தை பார்ப்பதில்லை, அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; இந்தத் தலைமைக் கருவை பரந்துபட்ட மக்களுடன் தொடர்பு படுத்துவதின் முக்கியத்துவத்தை அவர்கள் பார்ப்பதில்லை அல்

வதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்; எனவே அவர்களுடைய சிந்தனைகள் வெற்றாகவும், நடைமுறை சாத்தியம் அற்றதாகவும் ஆகிறது. அநேக தோழர்கள் ஒரு பணி சம்பந்தப்பட்டதில் ஒரு பொதுவான அறைகூவலை வெளியிடுவதோடு திருப்தி அடைந்துக்கொள்கிறார்கள்; ஆனால் அதை குறிப்பிட்ட, ஸ்தூலமான வழிகாட்டுதலுடன் உடனடியாக தொடர்ந்து செய்வதின் முக்கியத்துவத்தை பார்ப்பதில்லை அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; அதனால்

குறிப்பானதுடன் இணைக்கும் வழி முறைகளையும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும்; மேலும் இந்த வழிமுறைகளை நமது எதிர்கால வேலைகள் அனைத்திலும் கையாளவேண்டும்.

6. தலைமையின் சரியான சிந்தனைகளை உருவாக்குவதற்காக மக்களின் சிந்தனைகளை எடுத்துக்கொண்டு, அவற்றில் ஒருமுகப்பட்டு, பிறகு மக்களிடம் சென்று, அச்சிந்தனைகளில் உறுதியாக நின்று அவற்றைச் செயல்படுத்து - இதுதான் தலைமையின் அடிப்படைவழிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். சிந்தனைகளை ஒருமுகப்படுத்தும் செயல்போக்கிலும், அவற்றில் உறுதியாக நிற்கின்ற செயல்போக்கிலும், பொதுவான அறைகூவலை குறிப்பான வழிகாட்டுதலுடன் இணைக்கும் வழிமுறையைப் பின்பற்றுவது அவசியமானதாகும், இது அடிப்படை வழிமுறையின் ஒரு பகுதி உறுப்பாகும். பல நிகழ்ச்சிகளில் கொடுக்கப்பட்ட குறிப்பான வழிகாட்டுதலிலிருந்து பொதுவான சிந்தனைகளை (பொதுவான அறைகூவல்களை) உருவாக்கு; பல வேறுபட்ட அணிகளில் சோதனைக்கு அவற்றை உட்படுத்து (நீங்கள் மட்டும் செய்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவ்வாறு செய்யும்படி பிறரிடமும் சொல்வதன் மூலமும்') பிறகு புதிய அனுபவத்தில் ஒருமுகப்படு(அதனைத் தொகு;) பொதுவாக மக்களை வழிகாட்டுவதற்காக புதிய வழிகாட்டுதல்களை உருவாக்கு, தோழர்கள் இதனை தற்போதய சீர்செய் இயக்கத்திலும் செய்யவேண்டும், பிற எல்ல வகைப்பட்ட வேலைகளிலும் செய்யவேண்டும். இதனை அதிகத் திறமையுடன் செய்கின்றபோது நல்ல தலைமை உறுவாகிறது.

7. எந்த ஒரு வேலையை (புரட்சி யுத்தம், உற்பத்தி அல்லது கல்வி சம்பந்தப்பட்ட வேலை, சீர்செய் இயக்கம், வேலை அல்லது ஊழியரின் வரலாற்றைச் சோதிப்பது, பிரச்சார வேலை, ஸ்தாபன வேலை, எதிரியின் உளவு வேலையைத் தடுத்தல், மற்றும் பிறவேலைகள்; இவற்றில் எதுவாயிருப்பினும்) கீழ்மட்ட அணிகளுக்கு அளிக்கும்போது, ஒரு மேல்மட்ட ஸ்தாபனமும் அதனைப் பிறதுறைகளும் எல்லா வேலைகளிலும் சம்பந்தப்பட்ட கீழ்மட்ட ஸ்தாபனத்தின் தலைவர் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் வகையில் அவரைக் கவனிக்கவேண்டும். இந்த வழியின் மூலம் உழைப்புப் பிரிவினை, ஒன்றுபட்ட மத்தியத் தலைமை ஆகிய இரண்டையும் பெறமுடியும். உயர் மட்டத்தில் உள்ள ஒரு துறை, கீழ்மட்ட ஸ்தாபனத்திற்குப் போறுப்பான நபருக்கு (செயலாளர், தலைவர், இயக்குநர் அல்லது பள்ளி முதல்வர்) ஒன்றும் தெரியாமல் அல்லது அவருக்கு பொறுப்பு அளிக்காமல், கீழ்மட்டத்தில் உள்ள தனது துறை சம்பந்தப்பட்ட துறைக்கு நானே செல்லக் கூடாது (எடுத்துக்காட்டாக, ஸ்தாபனம், பீரச்சாரம் அல்லது உளவு தடுத்தல் ஆகிய சம்பப்தப்பட்ட ஒரு உயர் துறை, கீழ்மட்டத்தில் உள்ள தனது துறை சம்பந்தப்பட்ட துறைக்கு தானே செல்லக் கூடாது.) எல்லாவற்றிற்கும் பொறுப்பானவர், குறிப்பிட்ட பொறுப்பு கொடுக்கப்பட்டவர் ஆகியோர் இரண்டுபேர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட வேண்டும்; பொறுப்பு அளிக்கப்படுதல்வேண்டும். உழைப்

## யூலை பேரழிவின்பின் ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் ஒன்றை வற்புறுத்திக் கூறுகிறோம். எமது நாட்டின் தொழிலாள வர்க்க இயக்கத்தின் எதிர்காலம் மேற்குறித்த இருவகைக் கருத்துக்களுக்கிடையேயான போராட்டத்தின் முடிவில் தான் தங்கியிருக்கின்றது. முதலாவது வகைக் கருத்தின் வெற்றி நிச்சயமாக இனப் பதட்டத்தை அதிகரித்து மேலாதிக்கத்தின் விளைவுகளைப் பலப்படுத்தும். இது வெகுஜன இயக்கத்தைத் தவறான வழியில் இட்டுச் செல்லும். இரண்டாவது கருத்தின் வெற்றி இனப் பதட்ட நிலையைத் தணித்து அதன் மேலாதிக்க வலுவைக் குறைக்கும். வடகிழக்கு மக்களுக்கு ஜனநாயக சுதந்திரங்களை வழங்கி தென் பகுதியில் (தொழிலாளர் வர்க்கம் மிகுதியாக வாழும் பகுதியில்) வர்க்கப் போராட்டப் பாதையில் செல்வதற்குரிய சூழலை உருவாக்கும். வீழ்ச்சியுற்று வரும் பொருளாதாரச் சிக்கல்கள், வர்க்க உணர்வுகளைப் புதிய வீறுடன் எழச் செய்வதற்கான தருணத்தை இடதுசாரிகளுக்கு வழங்கும். இதன் மூலம் வர்க்க முரண்பாட்டில் இன முரண்பாட்டின் மேலாதிக்கம் பலவீனப்படும். ✲

நன்றி - 'லங்கா கார்டியன்'
1984-ம் மே முதல் தேதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப் பிரிவினையை ஒன்றுபடுத்தப்பட்ட தலைமையுடன் இணைப்பதுமூலம் மேற்கண்ட மத்தியப்படுத்தப்பட்ட வழிமுறையானது ஒரு குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள, எல்லாவற்றுக்கும் பொறுப்பான நபரின் மூலமாக, அதிக எண்ணிக்கையில் ஊழியர்களை - சிலசமயம் ஒரு ஸ்தாபனத்தில் உள்ள அனைவர்களையும் - அணி திரட்டுவதைச் சாத்தியமாக்குகிறது; இவ்வாறு தனித் தனித் துறைகளில் உள்ள ஊழியர்களின் பற்றாக்குறையை சமாளிக்கிறது, கையில் உள்ள வேலைக்கு அதிக எண்ணிக்கையில் ஊழியர்களை தீவிரமாக செயல்பட வைக்கிறது. இதுவும்கூட, தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கின்ற ஒரு வழியாகும். எடுத்துக்காட்டாக, ஊழியர்களின் வரலாற்றை ஆராய்வதை எடுத்துக்கொள்வோம். இந்த வேலை தனிமையில் செய்யப்பட்டால், அந்த வேலைக்குப் பொறுப்பான ஸ்தாபனத் துறையில் உள்ள ஒரு சிலரால் மட்டும் செய்யப்பட்டால், அது நிச்சயமாக நல்ல முறையில் செய்யப்பட முடியாது ஆனால் அந்த வேலையில் பங்கெடுக்க தன்னுடைய ஊழியர்களில் பலரை அல்லது அனைவரையும் கூட அணிதிரட்டுகின்ற ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் அல்லது தனது மாணவர்களில் பலரை அல்லது அனைவரையும் கூட அணிதிரட்டுகின்றஒரு குறிப்பிட்டபள்ளியின் நிர்வாகத் தலைவர்மூலம் செய்யப்பட்டால், அதேசமயத்தில் உயர்மட்டத்தில் உள்ள ஸ்தாபனத்துறையின் தலைமை உறுப்பினர்கள் தலைமையை மக்களுடன் இணைக்கும் கொள்கையைக் கையாண்டு சரியான வழிகாட்டுதலை அளித்தால், அப்போது சந்தேகமின்றி ஊழியர்களின் வரலாறுகளை ஆய்கின்ற அந்தப் பணி திருப்திகரமாக நிறைவேற்றப்படும்.

8. எந்த ஒரு இடத்திலும், ஒரே சமயத்தில் ஏராளமான மையப் பணிகள் இருக்கமுடியாது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரேஒரு மையப்பணி தான் இருக்கமுடியும்; அத்துடன் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தர அளவில் முக்கியத்துவம் உடைய பிற பணிகளும் இருக்கும். அதன் விளைவாக, அந்த இடத்தில் அனைத்திற்கும் பொறுப்பான நபர், அங்கு போராட்டத்தின் வரலாற்றையும், சூழ்நிலைமையையும் கணக்கில் கொண்டு, பல்வேறுபட்ட பணிகளை முறையான வரிசைக்கிரமத்தில் செய்ய வேண்டும்; அவர் உயர்மட்டத்தில் இருந்து வருகின்ற செயல் குறிப்புகளின்மீது, தான் எதுவும் திட்டமிடாமலேயே, அப்படியே செயல்பட்டு, அதன் மூலம் பலதரப்பட்ட "மையப் பணிகளை"யும், குழப்பமான ஒழுங்கற்ற ஒரு நிலைமையையும் உருவாக்கக்கூடாது. ஒரு உயர்மட்ட ஸ்தாபனமும் ஒரே சமயத்தில் பல்வேறு பணிகளை அவற்றின் ஒப்புநோக்கிய முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் சுட்டிக்காட்டாமல் அல்லது எது மையப் பணி என்பதைக் குறிப்பிட்டுக் காட்டாமல், ஒரு கீழ்மட்ட ஸ்தாபனத்திற்கு அளிக்கக்கூடாது; ஏனென்றால் இது கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் தங்களுடைய பணிகளில் எடுக்கவேண்டிய படிகளில் குழப்பத்திற்கு இட்டுச்செல்லும்; அதனால் எவ்வித நிச்சயமான விளைவுகளும் கிடைக்காது. ஒவ்வொரு பகுதியின் வரலாற்றுச் சூழ்நிலைகள், நிலவுகின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் வெளிச்சத்தில் முறையாக முழுச் சூழ்நிலையையும் கணக்கில் கொள்வதும், ஒவ்வொரு குறிப்பிட்ட கால கட்டத்திலும் வேலையின் புவிஈர்ப்பு மையத்தையும், தொடர்ச்சியையும் தீர்மானிப்பதும், தீர்மானத்தை உறுதியாக எடுத்துச் சென்று, நிச்சயமான விளைவுகள் பெறுவதை உறுதிப்படுத்துவதும் தலைமையின் கலையின் ஒரு பகுதியாகும். இதுவும்கூட தலைமை வழி முறையின் ஒரு பிரச்சினையாகும்; தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கின்ற பொதுவானதை குறிப்பானதுடன் இணைக்கின்ற கொள்கைகளை கையாளும் போது மேற்கண்டதையும் தீர்க்க கவனம் எடுக்கப்படல் வேண்டும்.

9. தலைமையின் வழிமுறைகள் பற்றிய விரிவான விஷயங்கள் இங்கு கூறப்படவில்லை; இங்கு முன் வைக்கப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள தோழர்கள் தாங்களே கடுமையாக சிந்திப்பார்கள் என்றும், தங்களுடைய சிருஷ்டித் தன்மையை (Creativeness) முழுமையாகச் செயல்படுத்துவார்கள் என்றும் நம்புகிறது. போராட்டம் கடுமையடைய அடைய பரந்துபட்ட மக்களின் தேவைகளுடன் தங்களுடைய தலைமையை நெருக்கமாக இணைப்பதற்கும், பொதுவான அறைகூவலை குறிப்பான வழிகாட்டுதலு

தொடர்ச்சி 22 ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு சகராவின் விடுதலைப் போராட்டம்

- தொடர் மூன்று

## ஐ. நா. ஸ்தாபனமும் அணிசேரா இயக்கமும்:-

1976/77-ல் அரபு யூனியன் அமைப்பு [O. A. U] விசேடமாக கூட்ட இருந்த உச்சி மகாநாட்டை மொரோக்கோ குலைத்தது. இதற்குக் காரணம் ஐ. நா. ஸ்தாபனமும், அணிசேரா இயக்கமும் மேற்கு சகாராவிடத்தில் தலையிடுவதை தடுப்பதே. மொறிற்றுனியாவில் இடம் பெற்ற புரட்சி ஒன்றை அடுத்து மொரோக்கோவினால் இந்த இரண்டு இயக்கங்களும் மேற்கு சகாரா விடயத்தில் தலையிடுவதை தடுக்க முடியவில்லை.

1978 டிசம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இரு தீர்மானங்களை நிறைவேற்றியது. இவற்றில் ஒன்று மொரோக்கோவின் பின்னணியுடன் நிறைவேறியது. இதற்கு 66 வாக்குகள் ஆதரவாகவும் 30 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. 40 வாக்குகள் பங்கு பெறவில்லை. இத் தீர்மானம் சகல நாடுகளையும் அரபு யூனியன் அமைப்பின் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு கொடுக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டது. மற்றைய தீர்மானம் அதிக அளவு பெரும்பான்மையுடன் 90 வாக்குகள் ஆதரவாகவும், 10 வாக்குகள் எதிராகவும் 30 வாக்குகள் பங்கு பெறாத நிலையிலும் கிடைத்தன.

இத் தீர்மானம் மேற்கு சகரா மக்களின் சுதந்திரம் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை மேலும் உறுதி செய்வதாகக்காணப்பட்டது. 1979ம் ஆண்டு ஹவானாவில் இடம் பெற்ற 6-வது அணிசேரா உச்சிமகாநாட்டில் மொரோக்கோவின் மேற்கு சகாரா ஆக்கிரமிப்புக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், மேற்கு சகாரா மக்களின் சுயநிர்ணய உரிமையையும் மேலும் உறுதி செய்தது.

1979-ம் ஆண்டில் இருந்து ஐ. நா. சபையினால் மேற்கு சகாரா தொடர்பாக நிறைவேற்றப்படும் சகல தீர்மானங்கட்கும் எதிராக வாக்களிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு மொரோக்கோ உள்ளானது.

1980-ம் ஆண்டில் மேற்கு சகாராவின் விடுதலை இயக்கமான "பொலிசாறியோ"வை ஐ. நா. ஸ்தாபனம் அங்கீகரித்ததுடன் மேற்கு சகரா மக்களின் சுதந்திர உரிமைகளை மேலும் உறுதி செய்யும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத் தீர்மானத்துக்கு ஆதரவாக 88 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் 43 வாக்குகள் பங்குபற்றாத நிலையிலும் கிடைத்தன.

இந்த ஐ. நா. தீர்மானங்களை எல்லாம் மன்னர் ஹசன் தொடர்ச்சியாக நிராகரித்தே வந்தார் ஒரு புதிய திருப்பமாக அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் ரீகனின் கீழ் அமெரிக்கா மட்டும் மேற்கு நாடுகளில் மேற்கு சகராவில் மொரோக்கோவிற்கு எதிராக வாக்களித்தது. அத்துடன் பேச்சு வார்த்தைகள் மூலமாகவே இப் பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என அமெரிக்கா வலியுறுத்தியது.

## உலக சக்திகள்:-

மேற்கு சகாரா குழப்பநிலை அது சார்ந்த நிலப் பகுதிக்கு மட்டும் அச்சுறுத்தலாக இருக்காது, பிராந்தியம் முழுவதற்குமே பெரும் நெருக்கடியாக இருந்தது. இதனால் இந்த விவகாரம் மொரொக்கோ, பாரிஸ், மட்றிட், வாஷிங்டன் ஆகியவற்றின் கொள்கை வகுப்பாளருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்தது.

## பிரான்ஸ்:-

பிரெஞ்சு ஜனாதிபதி வலறி கிஸ்காட் தமது இராணுவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசாறியோ இயக்கத்திற்கு எதிராக 1977/78-ல் மொறிற்றுனியாவில் மேற்கொண்ட ஊடுருவலையிட்டு கவலை கொண்டார். 1978-81 வரையிலான தமது காலப் பகுதியில் இது குறித்து அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். 1979-ம் ஆண்டு மொரோக்கோவிற்கு பிரதான ஆயுதவிநியோக நாடாக பிரான்சே இருந்த போதிலும் மேற்கு சகாரா மக்களின் சுய நிர்ணய உரிமையை அவர் அங்கீகரித்தார்.

1981-ம் ஆண்டு மித்தரோன் பிரெஞ்சு ஜனாதிபதியானார். அவர் அல்ஜீரியாவிற்கு கூடுதல் ஆயுத விநியோகத்தை மேற்கொள்ள முன்வந்தார். ஆயினும் மொரோக்கோவுடனான உறவை முறித்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. ஏனெனில் அந் நாட்டிலேயே உலகில் அதிக அளவில் பிரெஞ்சு நிபுணர்கள் இருந்து வருகின்றனர். (55 000) பிரெஞ்சு சோஷலிசக்கட்சியின் பொலிசாரியோ இயக்கத்துடன் நீண்ட கால உறவை வைத்திருந்த போதிலும் மித்தரோன் அரசாங்கம் மொரோக்கோவிற்கு ஆயுத விநியோகத்தை நிறுத்தவில்லை.

## ஸ்பெயின்:-

ஸ்பானிய அரசாங்கம் மொரோக்கோவுடனும், அல்ஜீரியாவுடனும் சுமுக உறவுகளை வைத்திருக்கவே விரும்பியது. பொலிசாறியோ இயக்கம் ஸ்பெயினின கவனத்தை இப் பிரச்சனையில் திசை திருப்ப முயற்சித்தது. 1978-ம் ஆண்டு ஒக்டோபரில் 8 ஸ்பானிய மீனவர்களை பொலிசாறியோ இயக்கத்திடம் இருந்து விடுவிப்பதற்காக அந்த இயக்கத்தை அங்கீகரித்து போராடி வரும் சகாரா மக்களின் பிரதி நிதியாகவும் அதனை ஏற்றுக் கொண்டது. 1979-ம் ஆண்டு ஸ்பானிய பிரதம மந்திரி பொலிசாரியோ இயக்கத்தின் செயலாளர் நாயகத்தை சந்தித்தார். இதன் பின்னர் ஸ்பெயினில் வலது சாரிக் கட்சி

# தோட்டத் தொழிலாளரைப் . . .

( 12-ம் பக்கத் தொடர்ச்சி )

தோட்டத் தொழிலாளருக்கு எனச் சில வீடுகளைக் கட்டிக் கொடுத்தது. ஆனால் கட்டட வேலை பூர்த்தியானதும் [1981-ல்] நிர்வாகத்தினதும் சில இனவாத அரசியல் வாதிகளதும் அனுசரணையுடன் வெளியாட்கள் (சிங்களவர்கள்) பலவந்தமாக குடியேறினர். பல தொழிற் சங்கங்களும் [இ. தொ. கா உட்பட] ஸ்தாபனங்களும் இதற்கெதிராக நடவடிக்கை எடுத்தன. ஆயினும் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

✲ அரசாங்கம் நாடெங்கும் மாதிரிக் கிராமங்கள் அமைத்து வீடற்றோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதாகக் கூறுகிறது. ஆனால் இந்தத் திட்டத்திலும் மலையகத் தமிழ் தொழிலாளருக்குப் பாரபட்சம் வெளிப்படையாகக் காட்டப்படுகிறது. மலையகத் தமிழ் மக்களுக்கென ஒரு மாதிரிக் கிராமம் நுவரேலியாத் தேர்தல் தொகுதியில், கொட்டலைக்கு அருகில் அமைச்சர் திரு. சௌமிய மூர்த்தி தொண்டமானால் அவரது பெயரில் [சௌமிய புரம்] அமைக்கப்பட்டுள்ளது. அதில்கூடத் தோட்டத் தொழிலாளருக்கு ஒரு வீடு தானும் கிடைக்கவில்லை. உத்தியோகத்தர்களுக்கும், தோட்டச் சேவையாளர்களுக்குமே அவை கிடைத்துள்ளன. இங்கு குடியிருப்பவர் பெரும்பாலும் தமிழர் என்பதால் இந்த மாதிரி கிராமத்திற்கு இதுவரை தொண்டமான் முயன்றும் கூட, மின்சாரம் வழங்கப்படவில்லை.

இறுதியாகக் கூறப்பட்ட இரு விபரங்களில் இருந்து அரசாங்கம் மலையக மக்கள் விடயத்தில் கடைப்பிடிக்கும் இனவாதக் கொள்கை தெளிவாகிறது. அது மாத்திரமல்ல தோட்டப் புறங்களில் இன்று அமைக்கப்படும் மாதிரிக் கிராமங்கள் வடக்கில் இடம்பெறும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்தைப் போலவே இனவாதத்தின் அடிப்படையில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதாகவே உள்ளன.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982-ம் ஆண்டு ஆட்சி அமைத்ததை அடுத்து பொலிசாரியோ இயக்கத்திற்கு ஆதரவு கூடத் தொடங்கியது

### சோவியத் யூனியன்:-

மேற்கு சகாரா விடயத்தில் சோவியத் யூனியன் சம நிலையானபோர்க்கிலேயேஇருந்தது. பொலிசாரியோ இயக்கம் போத்தளங்களில் எதிரிப் பிரிவுகளின் ஆயுதங்களைக் கைப்பற்றிய போதிலும் சோவியத் தயாரிப்பு ஆயுதங்களையே அந்த இயக்கம் உபயோகித்தது. சோவியத்திடம் இருந்து நேரடியாக அவற்றைப் பெறுத போதிலும் அல்ஜீரியா, லிபியா ஆகியவற்றிடம் இருந்து அது பெற்றது. இதே வேளை சோவியத் யூனியன் மொறோக்கோவுடனும் நல்ல உறவுகளை வைத்திருந்தது. பல கோடிக்கணக்கான நிதி ஒப்பந்தங்களை இந்த நாட்டுடன் அது செய்து இருந்தது. இவற்றில் இரசாயனப் பொருட்கள் மற்றும் காட்டு வளப் பொருட்கள் என்பன அடங்குகின்றன.

### அமெரிக்கா:-

அமெரிக்கா 3-ம் உலக நாடுகளில் இராணுவவிருப்பு உள்ள நாடுகளுடன் தனது கூட்டினை வளர்ப்பதில் பெரும் ஆர்வம் கொண்டு இருந்தது. ஈரானில் ஷாவின் ஆட்சி கவிழ்ப்பு. நிக்கரகுவாவில் அனெஸ்ரா சியோ சேமோசா ஆட்சி கவிழ்ப்பு ஆகியவற்றை அடுத்தே இந்த ஆர்வம் பெருகியது, 1981-ம் ஆண்டில் மொரோக்கோவிற்கான இராணுவ உதவிகளும் பயிற்சிகளும் அதிகரிக்கப்பட்டன 1982-ம் ஆண்டில் ரீகன் நிர்வாகம் மொரோக்கோவிற்கு மேலும் உதவிகளை அதிகரித்தது. இவற்றில் மொரோக்கோ விமானப் படைக்கு சிதறி வெடிக்கும் பயங்கர ''கிளஸ்ரர்'' குண்டுகள் விநியோகமும் அடங்கும்.

♠ ♠ ♠

> ''அரசியல் இலக்கற்ற கெரில்லாப் போராட்டம் தோல்வியையே தழுவும், போராட்டத்தில் அரசியல் குறிக்கோள்கள் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்காவிடின் அவர்களின் அனுதாபத்தையும், ஒத்துழைப்பையும். உதவிகளையும் ஒரு போதும் பெற முடியாது. எனவே, கெரில்லாப் போரட்டத்தின் உயிர்த்துடிப்பு புரட்சித் தன்மை வாய்ந்தது.''
>
> **நன்றி :- சோஷலிஸத் தத்துவமும் கெரில்லா யுத்தமும்.**

## தலைமையின் . . .

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் இணைப்பதற்கும், அதன் மூலம் தலைமையின் அகநிலைவாத, அதிகாரத்துவ தன்மைகளை முழுமையாகத் தகர்த்தெறிவதற்கும் கம்யூனிஸ்ட்களுக்கு அதிக அவசியம் ஏற்படும். தமது கட்சியின் முன்னிலையில் உள்ள அனைத்துத் தோழர்களும் எல்லா நேரங்களிலும் விஞ்ஞான பூர்வமான, மார்க்சிய தலைமை வழி முறையை அகநிலைவாத, அதிகாரத்துவ தலைமை வழி முறைக்கு எதிராக வைக்க வேண்டும்; முதலில் கூறியதை பின்னால் கூறியதை வெல்லப் பயன்படுத்த வேண்டும். அகநிலை வாதிகளும், அதிகாரத்துவ தன்மை கொண்டவர்களும் தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைகின்ற, பொதுவானதை குறிப்பானதுடன் இணைகின்ற கொள்கைகளைப் புரிந்து கொள்வதில்லை; அவர்கள் கட்சி வேலைகளின் வளர்ச்சிகளைப் பெரிய அளவில் தடுக்கிறார்கள். அகநிலைவாத, அதிகாரத்துவ தன்மை வழி முறையை முறியடிக்க, நாம் விஞ்ஞான பூர்வமான மார்க்சிய தலைமை வழிமுறையை விரிவாகவும், ஆழமாகவும், வளர்க்க வேண்டும். ✣

**- மாவோ -**

**நன்றி:- சமரன்**

*[அக்டோபர், நவம்பர் 79]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழப் பெண்களும் போராட்டமும்

"ரம்பை"

யாழ்ப்பாண சமூகத்தில் பெரும்பான்மையினராக இருப்பவர்கள் பெண்களாவர். இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மேலோட்டமான கணிப்பின் படி ஆண், பெண் விகிதாசாரம் ஒன்றிற்கு ஐந்து என்ற வகையில் அமைந்திருப்பதாக அறியப்பட்டுள்ளது. இத்த நிலைமை நெருக்கடி நிலைமைகளால் மேலும் அதிகரிப்பதற்கு சாத்தியங்கள் உள்ளன உதாரணமாக அரசியல் நெருக்கடி காரணமாக அந்நிய நாடு செல்லும் இளைஞர்களின் தொகை ஒரு புறத்தில் அதிகரித்து வருகின்றது. இராணுவத்தின் தாக்குதல்களால் உயிரிழக்கும் ஆண்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவ் வேளையில் சமூகத்தின் பல்வேறு விடயங்களிலும் பெண்களின் பொறுப்பும் போராட்டமும் வற்புறுத்தப்படவேண்டிய அவசியம் உணரப்படுதல் வேண்டும்.

பெண்களின் மொத்த விகிதாசாரம் மட்டுமன்றி; கல்வி, தொழில் வாய்ப்பு ஆகிய விடயங்களிலும் பெண்களின் பங்கு கூடுதலாக இடம் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் ஆண் மேலாதிக்க வாதம், நிலப்பிரபுத்துவ வழக்கங்கள் என்பவை காரணமாக பெண்கள் மீது விதிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடுகளும், தடைகளும் தளர்த்தப்படாதவைகளாகவே உள்ளன. இவை சமூகத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளாலும், நெருக்கடி நிலைமைகளாலும் எவ்வித மாற்றத்தையும் அடையவில்லை.

ஆண்களின் மேலாதிக்கத்தைப் பிரதானமாக வற்புறுத்தும் தன்மை கொண்டது யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பாகும். இங்கு பெண்களுக்கு இரண்டு மிகவும் வித்தியாசமான அந்தஸ்துகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு புறத்தில் பெண் தந்தை, கணவன், சகோதரன், மகன் ஆகிய பல நிலைப்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவளாகவும், அவர்களுக்கு சேவை செய்யும் பணிகாரியாகவும் அடங்கி நடக்குமாறு வற்புறுத்தப்படுகின்றாள். மறு புறத்தில் பெண் சர்வ வல்லமையும் வாய்ந்தவளாகவும் தெய்வீக, அந்தஸ்து கொண்டவளாகவும் . உயர்வுபடுத்தப்படுகின்றாள். இந்த இரண்டாவது அம்சம் ஒரு மாயை போலவேயுள்ளது. இந்த அந்தஸ்தின் இரட்டைத் தன்மையும் உணரப்பட்டு பெண்ணுக்கு உரிய சம அந்தஸ்து வழங்கப்படுவது பெண்களின் பங்களிப்பை உரிய வகையில் பெறுவதற்குச் சாதகமாக அமையும்.

பெண்கள் ஆரம்பத்தில் வீட்டிற்கு உரியவர்களாகவே கணிக்கப்பட்டு வந்தனர். அவர்களுக்கு வேண்டியவை யாவும் ஆண்களால் வழங்கப்பட்டன. அதன் மூலம் ஆண்களின் மேலாதிக்கத்தைப் பெண்கள் ஏற்றனர். ஆனால் கடந்த நூற்றாண்டளவில் நடைபெற்ற சமூக மாற்றங்களினால் பெண்கள் முன்னேற்றம், பெண் விடுதலை, பெண்கள் கல்வி போன்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பெண்கள் வீட்டிற்கு வெளியே நடமாடவும், கல்வி கற்கவும் அதன் பின்னர் தொழில் பார்க்கச் செல்லவும் அனுமதிக்கப்பட்டாள். இவை காரணமாகப் பெண்களின் வருமான பலம் அதிகரித்ததோடு, சிந்தனை மாற்றங்களும் ஏற்பட வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆனால் பெண்களின் உரிமையிலும், அந்தஸ்திலும் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. குறிப்பாகப் பெண்கள் அத்தகைய மாற்றங்களை உள்வாங்கும் அளவுக்கு முன்வ வில்லை, அவர்கள் மீதான சமூகத் தடைகள் பலம் வாய்ந்தனவாகவே இருந்தன. அது மட்டுமன்றி தொழிலுக்கு செல்லும் பெண் வீட்டிலும் தனது கடமையை நிறைவேற்றும் அளவுக்குப் பெண்களின் கடமைகளே அதிகரித்தன.

இவ் வேளையில் பெண்களின் உண்மையான பொறுப்பை விளங்கிக் கொள்வதும், நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும். பெண்கள் மீது விதிக்கப்பட்டு வந்த தடைகள் சமூகத்தின் பொதுவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. குறிப்பாகச் சமகாலத் தேசியப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது இதற்கு அடிப்படைக் காரணம் நீண்ட காலமாக அடக்கப்பட்டு வந்த பெண்களின் பொறுப்பற்ற மனோபாவம் எனலாம், அவர்கள் அரசியலில் எது நடந்தாலும் சரி என்ற நோக்கில் நடந்து கொள்வது வழக்கமாயுள்ளது. மறுபுறத்தில் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடும் ஆண்கள் தானும் பெண்களின் பங்களிப்பை வற்புறுத்தாது, குறைத்து மதிப்பிடல் காணலாம். இந்த தன்மை மாறி பெண்களை அரசியல் மயப்படுத்துவதும், தீர்மானமெடுத்தலில் அவர்களின் உரிய அந்தஸ்தை வழங்குவதும் சமூகத்தின் பிரதான கடமை ஆகும்,

இது வரை காலமும் தேசியப் போராட்டத்தினை இளைஞர்களே முன்னெடுத்துச் சென்றதுடன், அவர்களே அதன் உடனடி விளைவுகளை எதிர் கொள்வோராகவும் இருந்தனர். ஆனால் தமிழ்ப் பிராந்தியம் என்ற களத்தில் பெரும்பான்மையினராக வாழும் பெண்கள் போராட்டத்தின் தாக்கங்களையும், விளைவுகளையும் எதிர் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக இராணுவ நடவடிக்கைகளால் குடும்ப உழைப்பாளியை இழக்கும் பட்சத்தில் பெண்களின் சுமைகள் மேலும் அதிகரிக்கின்றன. குடும்பத்திற்கு வேண்டிய வருமானம், வீட்டுக்கருமம், வீட்டு நிர்வாகம் ஆகிய எல்லாப் பொறுப்புக்களையும் பெண்களே செய்ய வேண்டியதாக உள்ளது. இவ் வேளையில் பெண்களுக்கு தொழில் வாய்ப்பு, போதிய ஊதியம் என்பன கிடைப்பதெல்லாம் அரிதாகவே உள்ளது.

இத்தகைய சுமைகளால் பெண்கள் மனமுடைந்து போகாதவாறு பாதுகாத்துக் கொள்வதும், அவர்களை அரசியல் மயப்படுத்திப் போராட்டத்தில் பங்கெடுக்கவைப்பதும் அவசியமாகும். இவ்வாறு செய்வதன் மூலமே அதி பெரும்பான்மையினராக உள்ள பெண்களைத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்த முடியும்.

பொருளாதார நெருக்கடி, அரசியல் மயப்படுத்தப்படாமை, ஆகிய காரணிகளால் பெண்கள் தவறாக உபயோகப்படுத்தப்படும் அபாயங்களும் உள. உதாரணமாக இராணுவத்தினராலும், அரசினாலும் இவர்கள் இலகுவில் ஈர்க்கப்பட்டு உளவறிதல், அடையாளம் காட்டுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவர். சரியான அரசியல் மயமாக்கம் இருக்குமிடத்து இத்தகைய போக்குகள் குறைக்கப்படும் வாய்ப்புகளேற்படும்.

அது மட்டுமன்றி இராணுவத்தினரின் திடீர் முற்றுகையின் போது பெரும்பாலான பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். சிலர் இராணுவத்தினரின் பலாத்காரமான கற்பழிப்புக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் இதனைக் கௌரவப் பிரச்சனையாகக் கருதி மனமுடைந்து போவதுமுண்டு. இவை பற்றிய தகவல்களை வெளிடவும் அஞ்சுகின்றனர். அரசியல் மயப்படுத்தப்பட்ட பெண்களால் இப் பிரச்சனைகளைச் சரியாக அணுக முடியும். சமூகமும் இந்த விடயங்களில் தமது மதிப்பீடுகளைச் சரியாகக்கணித்துக் கொள்ள முற்பட வேண்டும் உதாரணமாக இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களை கௌரவப் பிரஜைகளாகக் கணிப்பிட முன்வர வேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் எத்தகைய பங்கினை வகிக்க வேண்டும். என்பது பற்றிய சரியான அறிவு பெண்களுக்கு வழங்கப்படல் வேண்டும், பெண்களின் அரசியற்பிரவேசம் என்பது பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி இராணுவ, பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தான் என்ற தவறான கணிப்பு பலரிடம் காணப்படுகின்றது. அத்தகைய பணிகளைச் செய்ய கூடிய ஆற்றலும், வலிமையும் கொண்ட பெண்கள் அவ்வாறு செய்வது பாராட்டத்தக்கதே. ஆனால் வீட்டில் இருந்து கொண்டே செய்யக்கூடிய கடமைகள் மிகவும் அதிகமுள்ளன. தனது குடும்பத்தவரைப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதித்தல், மருத்துவ வசதி,

தொடர்ச்சி 27-ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியம்

தமிழீழ விடுதலைப் போரில் இன்று ஆயுதங்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் விடுதலைப் போராட்டம் பற்றிய மக்களின் உணர்வுகள் வளர்ச்சியடையவில்லை. எதற்காக இந்தப் போராட்டம் என்பது பற்றியோ, எதுவரைக்கும் இந்தப் போராட்டம் என்பது பற்றியோ சரியான பிரக்ஞை அற்றவர்களாகவே எமது மக்கள் இருக்கிறார்கள். இது அவர்களின் தவறு அல்ல. இந்தப் போக்கு சுதந்திரமானது அல்ல. சிக்கலை ஏற்படுத்தக் கூடியது எனவே இது சம்பந்தமாகக் கவனமெடுத்து மக்களின் உணர்வுகளைச் சரியான வழியில் வளர்த்தெடுத்து அவர்களைச் செயல்படவைக்குமளவிற்கு அவர்களுக்கு அறிவூட்ட வேண்டியது முக்கியமாகும். இதில் கலை, இலக்கிய வேலைகள் முக்கிய பங்கினை வகிக்க முடியும். எவ்வாறு கலை, இலக்கிய வேலைகளை இதிற் பயன்படுத்தலாம் என்பது பற்றிப் பரிசீலிப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கலை, இலக்கியங்கள் என்றவுடன் சாதாரணமாக எமக்கு நினைவுக்கு வரும். சில குப்பைகள் உண்டு. தென்னிந்திசினிமா, இந்தப் பாணியிலமைந்த நாடகங்கள், இன்று தொலைக் காட்சியில் தமிழ் நாடகங்கள் என்ற பெயரில் காட்டப்படும் குப்பைகள், ஆனந்த விகடன், குமுதம் போன்றவை, துப்பறியும் நாவல்கள், பாலியல் நாவல்கள், ............ இப்படி எத்தனையோ குப்பைகள் சட்டென்று எமது நினைவுக்கு வரும். இவற்றையல்ல இக் கட்டுரையில் குறிப்பிடப்போவது. இவையெல்லாம் வெறும் பொழுது போக்கிற்கானவை. இவற்றால் எந்த வித நன்மையும் இல்லை; தீமைகள் நிறைய உண்டு. இவை எமக்குத் தேவையற்றவை.

எமக்குத் தேவையானவை எவை? எமது மக்களை ஒரு இலக்கு நோக்கி அழைத்துச் செல்லக்கூடிய கலை, இலக்கியங்களே இன்று எமக்குத் தேவை வீரம் மிக்கதும் உத்வேகமூட்டுவதுமான மகத்தான கலை, இலக்கியப் படைப்புகளே எமக்கு இன்று தேவை. இத்தகைய புரட்சிகர கலை, இலக்கியங்கள் சரியான வழியில் அபிவிருத்தி செய்யப்பட்டு இங்கு ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் புரட்சிகரப் போராட்டத்திற்கு உதவி செய்யும் வகையிலே எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

எமது எதிரியை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்க ஆயுதங்களே முக்கியமானவை. எமது ஆயுதங்கள் எதிரியின் தளங்களை நிர்மூலமாக்கவேண்டுமென்பதிலே நாம் மிகுந்த விருப்பங் கொண்டுள்ளோம். எமது ஆயுதங்களின் முழக்கங்களைக் கேட்கவே நாமின்று ஆசைப்படுகிறோம். ஆனால் அது மட்டும் போதாது. கலாச்சார வேலையும் தேவை.

எமது மக்கள் பல பிற்போக்குக் கருத்துகளை கொண்டிருக்கிறார்கள். இக்கருத்துகள் எமது மக்களை சரியான திசையில் சிந்திக்கவிடாமல் அமுத்திக் கொண்டிருக்கிறது. இவை எமது மக்களுக்கு போராட்டத்தில் பெரும் தடங்கலாக இருக்கின்றன. இத்தடைகளை அகற்றவேண்டியது முக்கியமானது. கலாச்சார வேலைகளின் மூலம் இதனைப் பெருமளவு செய்யலாம். நாம் மிக மிகப் பொறுமையாக எமது மக்களுக்குப் போதனையூட்டவேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும். அவர்களை வெகு இறுக்கமாக ஐக்கியப்படுத்தவேண்டும். அவர்களை ஒரே மனது, ஒரே உள்ளத்துடன் எதிரிக்கெதிரான உறுதியான போரைத் தொடுக்க வழி நடத்தவேண்டும். இதற்குபொறுமையுடன் வேலை செய்யக்கூடிய ஊழியர்களைக் கொண்ட ஒருகலாச்சாரப் படைதேவை.

சரி; இந்தக் கலாச்சாரப் படை எப்படியான மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் வேலை செய்யவேண்டும்? எமது கலை, இலக்கியங்கள் யாருக்காகப் படைக்கப்படவேண்டும்? நிச்சயமாகப் பாமரமக்கள் மத்தியில்தான் எமது கலாச்சாரப் படை வேலைசெய்யவேண்டும். எமது கலை, இலக்கியங்கள் அவர்களுக்காகத்தான் படைக்கப்படவேண்டும். எமது படைப்புகள் அவர்களுக்கு வெகு அருகிலே செல்லவேண்டும் அவர்களை அணைக்கவேண்டும் அவர்களோடு அவர்களாக உறவாடவேண்டும். அவர்களுக்காகவே இருக்கவேண்டும். இதிலே நாம் தவறுவிட்டுவிடக்கூடாது. அவர்கள் மத்தியிலேபுரட்சியை எடுத்துச்செல்கிற காற்சட்டை போட்ட புரட்சியாளர்களாக நாம் இருக்கக்கூடாது இதிலே நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

பாமர மக்களுக்கான கலை, இலக்கியங்களை எவ்வாறு உருவாக்குவது என்பதைப் பார்ப்போம். பாமர மக்கள் கூடுதலாக நாடகங்களையும், ஓவியங்களையும் பார்க்கவும், பாடல்களைக் கேட்கவும் விரும்புகின்றனர். ஆகையால் இத்துறைகளில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இப்படைப்புகள் எமது மக்களின் பிரச்சினைகளைச் சொல்லவேண்டும். அப்பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தோலுரித்துக் காட்டவேண்டும். அவர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் விடிவு விடுதலைப் போராட்டத்தின் வெற்றியிலேயே தங்கியுள்ளது என்பதை விளக்கவேண்டும். அவர்களையும்செயல் புரியக் கிளர்ந்தெழுமாறு அறைகூவி அழைக்கவேண்டும்.

வெறுமனே கிளர்ந்தெழுங்கள் என்று அறைகூவுவது மட்டும் போதாது. எவ்வாறான விடுதலைக்காக நாம்போராடுகிறோம், எவ்வாறு நாம்போராடவேண்டும், எங்கே நின்று போராடவேண்டும், இப் போராட்டத்தில் எமது நண்பர்கள் யார், எமது எதிரிகள் யார் என்பது பற்றியெல்லாம் எமது படைப்புக்களினூடு அவர்களுக்கு விளக்கமளிக்கவேண்டும். இந்த விடயங்கள்தான் எமது படைப்புகளின் உள்ளடக்கங்களாக இருக்கவேண்டும். இந்த உள்ளடக்கங்களைச் சொல்வதற்குரியவடிவங்களை நாம் எமது பாரம்பரியத்திற் தேடவேண்டும். ஏனென்றால் அவைதான் எமது மண்ணிலிருந்து, எமது மக்களிடமிருந்து தோற்றம் பெற்றவை. அவற்றால்தான் எமது மக்களிடம் செல்லமுடியும் உதாரணமாக எமது நாட்டுக்கூத்தும். நாட்டார் பாடல்களும் செழுமைப்படுத்தப்பட்டு அவற்றூடு புதிய கருத்துக்கள் சொல்லப்படவேண்டும். இம்முயற்சிகளின்மூலமே நாம், நமது தமிழ் தேசியக் கலை வடிவங்களை உருவாக்கும் பணியிலும் முன்செல்லவேண்டும். கலைப் படைப்புகளை உருவாக்கும்போது ஒன்றை நாம் கவனத்திலெடுக்கவேண்டும். எமது படைப்புகள் இலகுவானதாகவும், எந்த இடத்திற்கும் அவற்றை எடுத்துச்செல்லக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும் உதாரணமாக நாடகங்கள் வீதி நாடகங்களாக அமைத்தல் சிறப்பானது.

கலாச்சாரப்படை தனது படைப்புகளுக்கான கருத்துகளை எங்கிருந்து பெற்றுக்கொள்ளும் நிச்சயமாக பாமர மக்களிடமிருந்துதான்; அவர்கள் மத்தியில் அவர்களோடு அவர்களாக வாழவேண்டும். அவர்கள் மத்தியில் நடக்கக்கூடிய சகல நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளவேண்டும். செத்தவீடு, கலியாணவீடு, இன்னும் என்னென்னவோ அவற்றிலெல்லாம் பங்குகொள்ளவேண்டும். அவர்களுக்கு நிறைய உதவிகள் தேவைப்படும். அவற்றையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். அவர்களது மொழியிலேயே அவர்களுடன் பேசவேண்டும். இது சுலபம்போல் தோன்றும். ஆனால் உண்மையில் இது மிகக் கடினமானது. இவ்வாறு அவர்களுடன் வாழ்வதன்மூலம், அவர்களின் வாழ்க்கை முறைகளை, அவற்றில் உள்ள பிற்போக்குத்தனங்களை கூர்ந்து அவதானித்துக்கொள்ளவேண்டும். அவர்களின் பிரச்சினைகளை நுணுக்கமாக அறிந்துகொள்ளவேண்டும். இதிற் கவனமாக இருக்கவேண்டும். அவர்களின் பிரச்சி

✻ "இலக்கியமானது பாட்டாளி வர்க்கத்தின் பொது இலட்சியத்தின் ஒரு பகுதியாக வேண்டும்; தொழிலாளி வர்க்கம் அனைத்தின் அரசியல் உணர்வு கொண்ட முன்னணிப் படை அனைத்தாலும் இயக்கப்படும் மாபெரும் சக்தியாக ஆகிவிட வேண்டும்"

- லெனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைகளை அவர்களிடமிருந்து கேட்டறிவதல்ல; இவ்வாறு தான் கலைப்படைப்புகளுக்கான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இது, மட்டுந்தான் கலாச்சாரப்படைதனது படைப்புகளுக்கான கருத்துக்களைப் பெறச் சரியான மார்க்கமாகும். இதுதான் உண்மையானது. இதைவிட்டு எங்கோ இருந்தபடி இந்த மக்களுக்கான கலை இலக்கியங்களைப் படைப்போமென்பது வெறும் போலியானது, கற்பனையானது. உண்மைகள் எப்போதும் கற்பனைகளைவிட உன்னதமானது, இதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு நாம் மக்களிடம் வாழ்ந்து, மக்களிடம் கருத்துக்களைப் பெற்று, மக்களுக்கு பரிச்சியமான வடிவங்களில் மக்களுக்கானகலைகளை மக்களுக்கு வழங்கும்போது, அவை நிச்சயம் மக்களின் நெஞ்சங்களில் புகுந்து, செறிந்து அவர்களைப் புதியமனிதர்களாக்கும். புதிய மனிதர்கள் ஒரு புது உலகைப் படைப்பார்கள். ◆

---

## தமிழ் ஈழப் . . .

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத்தல், முழு சமூகத்திற்கும் தேவையான உணவு உற்பத்தியில் ஈடுபடுதல் ஆகியவையும் பெண்கள் செய்யக் கூடிய பணிகளாகும். சரியான அரசியல் உணர்வு பெறாது போராட்டத்தில் ஈடுபடத் துடிக்கும் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி இயக்கங்களுள் பிரவேசிப்பதையும், பின்னர் சரியான நெறிப்படுத்தலின்மையால் பின் வாங்குதலையும் காணலாம். சில வேளைகளில் போராட்டத்திற்கெனப் புறப்பட்ட பெண்கள் புதைகுழிகளில் இருந்து துப்பாக்கிக் காயங்களுடைய சடலங்களாக வெளிப்பட்டமையும் பொது மக்கள் அடையாளம் கண்டுள்ளனர். உண்மையான அரசியல் ஈடுபாடும் தியாக மனப்பான்மையும் கொண்ட பெண்களைச் சரியான முறையில் பயன்படுத்துவது அவசியமாகும்.

தேசிய விடுதலைப் போராட்டம் என்பது அரசின் அடக்குமுறைக்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரான இராணுவப் போராட்டம் போன்று அடிப்படையில் தோன்றினாலும், அரசியல், பொருளாதாரம், சமூகமுன்னேற்றம், கலாச்சார முன்னேற்றம் ஆகிய பல்வேறு உள்ளடக்கிய ஒரு பரந்த போராட்டம் என்பதை விளங்கிக் கொள்ளல் அவசியம். இந்த விடயங்களில் பெண்களின் பொறுப்பும், பங்களிப்பும் சரியாகக் கையாளப்படுதல் அவசியம். பெண்கள் தமது பொறுப்புகளையும், வலிமையையும் உணர்ந்து தொண்டு உரிய பங்கை வகிக்கவும், உரிய அந்தஸ்தைப் பெறவும் முன்வரல் வேண்டும். பெண்கள் போராட்டத்தில் பங்கு கொள்ளாத வரையில், அது ஓர் மக்கள் போராட்டமாக மாறுவதும் சாத்தியமற்றதாகும். ✲

---

"புரட்சிகர பலாத்காரமானது பொதுமக்களின் அரசியல் அமைப்புடன் இணைந்ததாகவும், ஆயுதம் தரித்த மக்கள்படையுடனும், ஆயுதம் தாங்கிய போராட்டத்துடனும்; வெகுஜன எழுச்சியுடனும் முடிவுறும் மக்கள் போராட்டமாக அமைய வேண்டும்."

- ஜியாப் (வியட்னாமின் படைத்தளபதி) -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்:- ஹிஸாரெவும் அன்னுமெர்லியும்

பாடியிருப்பவர்: ஜோன் பெய்ஸ்

எல்லேகளில் அவர்கள்
பரந்து காவல் காத்திருந்தார்கள்
சரணடைய நாங்கள் எச்சரிக்கப்பட்டோம்
செய்யமுடியாது இதை என்னுல்
மலேகளிடையே நான் மறைந்து போனேன்

நான் யார்
எங்கே நான் போகிறேன்;
எவரும் என்னைக் கேட்பதில்லே
ஆனல்
உங்களில் என்னை அறிந்தவர்கள்
என் காலடித் தடங்களே மூடிவிடுங்கள்

♠

அடிக்கடி என் பெயரை
மாற்றிக் கொண்டேன்
மனைவியை, மக்களே
இழந்தேன் ஆனல்
எனக்கு அநேக
நண்பர்களுண்டு;
அதில் சிலர் எனக்குப்
பலமாய் இருக்கிருர்கள்

ஒரு கிழவி எங்களுக்கு
மறைவிடம் தந்தாள்
பரண்மேல் ஒளிய வைத்தாள்
வந்னர் இராணுவ வீரர்கள்-
சிறு முணு முணுப்பும் இல்லாது அவள் செத்துப்போனுள்

♠

இன்று காலே
எங்களில்
மூவர் இருந்தோம்

(30-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசப்பான அனுபவத்திலிருந்து சரியான நடைமுறைக்கு:-

இது "தமிழ்-முஸ்லிம் கலவரம்" இல்லை, சிறுபான்மை இனங்களை அழிப்பதற்கான அரசாங்கத்தின் கலவரம் என்று சொல்வதே சரி. மட்டக்களப்பில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நடைபெற்ற துரதிஷ்டவசமான சம்பவங்கள் அரசாங்கத்தின் சதிதான் என்பது திட்டவட்டமாகத் தெளிவாகியுள்ளது. குறிப்பாக இக் கலவரத்தைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைச் சாராத முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொள்ளும் முறை மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. இக் கலவரம் அரசாங்கத்தின் சதியென்கின்ற போதிலும் இக் கலவரம் தோற்றுவிக்கப்படுவதற்கேதுவான சூழ்நிலையை, அதிலுள்ள கசப்பான அனுபவத்தை மிக ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை அவர்களுக்கிடையிலேயே மோதவிடுவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை கடந்த காலங்களில் செய்து வந்துள்ளது. பிரித்தாலும் தந்திரத்தின் படி இவக்கங்களுக்கிடையே ஆங்கில காலனித்துவம் மோதல்களை உருவாக்கியது போல சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகளும் தமிழ்ப் பேசும் மக்களிடையே மோதல்களை உருவாக்குவதிற் பல பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளனர். உதாரணமாக 1984- ஆண்டு நவம்பர் மாதம் சமூகத்துரோகிகள் என்றதன் பெயரில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் ஏழு பேர் "ஹரிஜனத்தவர்" என்றும் "ஹரிஜனத்தாரை" இயக்கங்கள் ஒடுக்குவதாகவும் லலித் அத்துலத்முதலி நீலிக் கண்ணீர் வடித்தார் தமிழ் மக்களிடையேயுள்ள சாதிப் பாகுபாட்டைப் பயன்படுத்தி சாதிக் கலவரத்தைத் தோற்றுவிக்க லலித் பெரும்பாடுபட்டார். அது பெரும் தோல்வியில் முடிந்தது. 1985-ம் ஆண்டு மாசி மாதம் வன்னிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் விநியோகித்த துண்டுப் பிரசுரத்தில் யாழ்ப்பாண மக்களுக்கும் வன்னி மக்களுக்கும் இடையிலான மோதலை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அதிலும் அவருக்குத் தோல்வியே கிடைத்தது. எனவே சாதி வேறுபாடு, பிரதேச வேறுபாடு என்பவற்றைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களிடையே மோதலை உருவாக்க எதிரி முயன்றுன் என்பதிற் சந்தேகமில்லை.

இந்த வகையில் தான் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதலை ஏற்படுத்த எதிரி நடவடிக்கைகளில் ஈடுபட்டான். எதிரி இந்த விதமான நடவடிக்கைகளில் அயராது ஈடுபடுவான், அவன் இதையல்ல இதைவிட மேலும் செய்வான் என்பது எமக்கு முன் கூட்டியே தெரியும். அதை முன்கூட்டியே விளங்கியுள்ளமையால் அவனது சதி முயற்சிகள் வெற்றியளிக்க முடியாதவாறு. அத்தகைய சதி முயற்சிகள் தோன்ற இடமளிக்காதவாறு நாம் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஓர் மோதலை எழுந்தமானத்தில் எதிரியால் உருவாக்க முடியவில்லை, ஆனால் ஒரு சூழ்நிலையை, கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித்தான் இம்மோதலை எதிரி தோற்றுவித்தான் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் எதிரி பயன்படுத்துவதற்கு ஏதுவான சந்தர்ப்பம், எம்மால் தோற்றுவிக்கப்பட்ட அந்தச் சந்தர்ப்பம் ஓர் கசப்பான அனுபவம், ஓர் கசப்பான பாடம். இப்போதாவது அதனை ஒரு பாடமாக ஏற்றுக்கொள்வோமா? அல்லது இனியும் ..............

போராட்டத்தின் பெயரால் பணத்திற்காக யாழ்ப்பாணத்தில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டார்கள். இதனை எதிர்த்து யாழ்ப்பாணத்திற் கதவடைப்புகள் நிகழ்ந்தன, இதனைப் பயன்படுத்திப் போராட்டத்திற்கெதிரான ஓர் பெரும் பிரச்சாரத்தையே எதிரி செய்தான். இதே போல கிழக்கில் முஸ்லிம் வர்த்தகர்கள் போராட்டத்தின் பெயரால் கடத்தப்ப்பட்டார்கள். அதனை எதிர்த்து முஸ்லிம் வர்த்தகர்களும் கதவடைப்பில் ஈடுபட்டார்கள். கடத்தியவர்கள் தமிழர் முஸ்லிம்கள் என்ற இன அடிப்படையில் கடத்தல்களை மேற்கொள்ளவில்லை. ஏனெனில் தமிழர்களையும் கடத்தித்தான் இருக்கிருர்கள். அதே வேளை முஸ்லிம் வர்த்தகர்களும் இன அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையில் கதவடைப்பை மேற்கொள்ளவில்லை, தமிழ் வர்த்தகர்களும் யாழ்ப்பாணத்தில் கதவடைப்புச் செய்து தான் இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கடத்தலையும் அதைத் தொடர்ந்த கதவடைப்பையும் எதிரி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளான். இவ்வாறான ஒரு சந்தர்பத்திற்கு நாம் ஏன் இடம் கொடுக்க வேண்டும்?

இந்த ஆள்க்கடத்தல்களை இயக்கங்கள் தான் செய்கின்றன என்று நாம் சொல்லவில்லை. ஆனால் போராட்டத்தின் பெயரால் இந்தக் கடத்தல்கள் நிகழ்கின்றன என்பதை மட்டும் நாம் சொல்ல வேண்டும். இந்த ஆள் கடத்தல்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்துகின்றன, அழிக்கின்றன. இத்தகைய கடத்தல்களை எதிர்ப்பதன் மூலம் நாம் போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டும். இத்தகைய கடத்தல்களை அனுபதித்தால், அதனைப் பார்த்துக் கொண்டு வாய் மூடி மௌனிகளாக இருந்தால் போராட்டம் அழிந்து போய்விடும். எனவே இயக்கங்களே! இத்தகைய விபரீத விளைவுகளைக் கொண்டுவரக் கூடிய நடவடிக்கைகளை எதிருங்கள் போராட்டத்தைப் பலப்படுத்துங்கள்.

எதிரி எப்பொழுதும் சதி நடவடிக்கைகளில் ஈடுபடுவான். ஆனால் எதிரிக்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களை நாம் கொடுக்கக் கூடாதென்பது போராட்டத்தில் ஓர் பிரதான அம்சம் இந்தச் சதி நடவடிக்கைகளில் எதிரி அப்படைப் பட்டுள்ளான். பெரும்பான்மையான முஸ்லிம் தலைவர்களும், முஸ்லிம் மக்களும் புரிந்துணர்வோடு நடந்து கொண்டுள்ளார்கள். அது ஓர் மகிழ்ச்சி தரும் விடயம். அதனை ஓர் சாதகமான அபசங்களாகப் பயன்படுத்தி தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உண்மையான, நெருக்கமான ஐக்கியத்தை வளர்ப்போம் கசப்பான அனுபவத்திலிருந்து சரியான நடைமுறைக்குப் போவோம்.

பாடல் . . . [28-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த மாலையில்
நான் மட்டுமே எஞ்சினேன்
இன்னமும் நான் சஞ்சரித்துக் கொண்டேயிருக்க வேண்டும்
எல்லைகளே என் சிறை

காற்றின் மேல் காற்று பாய்ந்து செல்லும்
கல்லறைகளினூடே காற்று பாய்ந்து செல்லும்

வரும் விரைவில்
சுதந்திரம்
பிறகு வருவோம் நாங்கள்
மறைவிடத்திலிருந்து

நன்றி: பிரக்ஞை - மே 76.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்திற்காக மக்களிடம் செல்வோம்;
ஜனநாயகத்துடன் மக்களிடம் செல்வோம்.

அன்பளிப்பு நல்கிய நண்பர்

'தளிர்' மாத இதழாக தொடர்ந்து வர

எமது வாழ்த்துக்கள்!

வாழ்த்துக் கூறும் நண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கட்சி துப்பாக்கியின் மீது ஆணை செலுத்த வேண்டும்;
கட்சியின் மீது ஆணை செலுத்துவதற்கு
ஒரு போதும் துப்பாக்கியை அனுமதிக்கக் கூடாது.''

**அன்பளிப்பு நல்கிய நண்பர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org